17TH JULY 2025

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 02 | இதழ்: 83 | பக்கங்கள் - 10 | editor.uthayam@gmail.com

## சுஜீவவுக்க பிணை வழங்கிய நீதிமன்றம்



சர்ச்சைக்குரிய சொகுசு வாகனம் பயன்படுத்தியது தொடர்பில் நீதிமன்றத்தில் ஆஜரான முன்னாள் இராஜாங்க அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான சுஜீவ சேனசிங்கவை இன்று (16) பிணையில் விடுவிக்க கோட்டை நீதவான் நீதிமன்றம்

03ம் பக்கம்பார்க்க...

# அமெரிக்க சார்பு சிரியா மீது இஸ்ரேல் கடும் தாக்குதல்

# படைத் தளங்கள் அரச கட்டிடங்கள் சேதம்

### மோதல் விரைவில் முடிவுக்கு வரும்

### அமெரிக்க பாதுகாப்பு செயலாளர்



ட்ரோஸ் இனத்தவர்களைக் காப்பாற்றுவதற்காக எனக் கூறி அமெரிக்க சார்பு சிரியாவின் இலக்குகள் மீது இஸ்ரேல் கடந்த சில நாட்களாக கடுமையான விமானத் தாக்குதல்களை மேற்கொண்டு வருகிறது.சிரியாவின் பாதுகாப்பு அமைச்சு கட்டிடம் உட்பட படைத் தளங்கள் மற்றும அரச கட்டிடங்களை இலக்கு வைத்து இஸ்ரேல் நடாத்தி வரும் இத் தாக்குதல் காரணமாக அந்த நாடு பெரும் நெருக்கடியை எதிர் கொண்டுள்ளது. இதேவேளை இந்த மோதலை முடிவுக்கு கொண்டு வர பேச்சுவார்த்தை நடாத்தி வருவதாக அமெரிக்க பாதுகாப்பு செயலாளர் மார்கோ ரூபியோ தெரிவித்துள்ளார்.

02ம் பக்கம்பார்க்க...

## கடந்த 6 மாதத்துக்குள் 1,44000 பேர் தொழில் நிமித்தம் வெளிநாடு பயணம்

### குவைத்துக்கே அதிகமானோர்!

(அஷ்ரப் ஏ சமத்)

2025 ஜனவரி முதல் ஜூன் மாதம் வரையிலான 6 மாதங்களில் 1,44,000 (1 இலட்சத்தி 44 ஆயிரம் பேர் தொழிலுக்காக வெளிநாடு பயணித்துள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அறிவித்துள்ளது.

88,684 ஆண்கள் 55,695

03ம் பக்கம்பார்க்க...

## பாடசாலை மாணவர்களுக்கு சீன சீருடைத் துணி அன்பளிப்பு

### பிரதமர் தலைமையில் அறிவிப்பு நிகழ்வு!



025 ஆம் ஆண்டுக்கான பாடசாலை சீருடைகளுக்குத் தேவையான ரூ.5,171 மில்லியன் பெறுமதியான துணி முழுவதும் சீன அரசாங்கத்தின் மானியமாக வழங்கப்பட்டுள்ளதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கும் நிகழ்வு ஜூலை 16 ஆம் திகதி பத்தரமுல்லையில் உள்ள கல்வி

02ம் பக்கம்பார்க்க...

## மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற சவூதி நிதியைப் பயன்படுத்துவேன்

### சவூதி பிரதிநிதியுடனான சந்திப்பில் ஜனாதிபதி!



ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மற்றும் சவுதி அபிவிருத்தி நிதியத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சுல்தான் ஏ. அல்-மர்ஷதிற்கும்

02ம் பக்கம்பார்க்க...

## ஈராக் வணிக வளாக விபத்தில் 60க்கும் அதிகமானோர் பலி!


கிழக்கு ஈராக்கின் அல்-குட் நகரில் உள்ள வணிக வளாகமொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் குறைந்தது 60 க்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதே நேரத்தில் தீயணைப்பு வீரர்கள் தீயைக் கட்டுப்படுத்த மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். இதேவேளை

03ம் பக்கம்பார்க்க...

## அமெரிக்க அச்சுறுத்தல்களுக்கு ஒரு நாளும் அடிபணியோம்

### ட்ரம்புக்கு பதிலடி கொடுத்த ரஷ்யா!



அமெரிக்காவின் அச்சுறுத்தல்களுக்கு அடிபணியப்போவதில்லை என ரஷ்யா பதிலடி கொடுத்துள்ளது.

உக்ரைன் மீதான போரை நிறுத்த

02ம் பக்கம்பார்க்க...

### உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சியமைப்பு;

## தேசிய மக்கள் சக்தியின் கன்னித்தன்மைக்குக் களங்கம்

### முஜிபுர் ரஹ்மான் எம்.பீ.



நாட்டின் அதிகமான உள்ளூராட்சி மன்றங்களில் எதிர்க் கட்சிகளை இணைத்துக் கொண்டு ஆட்சியமைத்துவருவதனால் தேசிய மக்கள் சக்தி அதன் கன்னித் தன்மையை இழந்துள்ளதாக ஐக்கிய

02ம் பக்கம்பார்க்க...

## மஹர பள்ளியை மீளத் திறக்க உரிய நடவடிக்கைகள் முன்னெடுப்பு

### பிரதியமைச்சர் முனீர் முலப்பர்



(அஷ்ரப் ஏ சமட்)

சிறைச்சாலை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில்

02ம் பக்கம்பார்க்க...

## முக்கிய ஒப்பந்தங்களில் இலங்கை – ஓமான் கைச்சாத்து

இலங்கை நிதியியல் உளவறிதல் பிரிவானது, ஓமானின் நிதியியல் தகவலுக்கான தேசிய நிலையத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டுள்ளது.

2006ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின்

03ம் பக்கம்பார்க்க...




அமானா வங்கியில்
வாகன நிதியுதவி

உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் மலிவான மாதாந்த தவணைகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 1,933/-
ரூ.100,000க்கு வாடகை*

- குறைந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரை மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

விதிமுறைகளும் நிபந்தனைகளும் பொருந்தும்*

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி Amãna Bank

அமானா வங்கி (PLC) ஆனது இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் அனுமதி பெற்ற ஒரு வர்த்தக வங்கி ஆகும்

## அமெரிக்க...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

ரஷியாவுக்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் 50 நாள்கள் கெடு விதித்துள்ளார்.

இதற்கமைய ரஷ்யா போரை நிறுத்தாவிட்டால் அந்நாட்டின் மீது 100 சதவீத கடுமையான பொருளாதார தடைகளை விதிக்கப்படும் எனவும் எச்சரித்துள்ளார்.

இந்நிலையில் இந்தக் மிரட்டலுக்கு ரஷ்யா செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ் பதிலளித்தார்.

“தங்கள் நாடு யாருடைய அச்சுறுத்தல்களுக்கும் அடிபணியாது.” என்று அவர் திட்டவட்டமாக தெரிவித்தார்.

”அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் கூறிய கருத்துக்கள் மிகவும் தீவிரமானவை. குறிப்பாக, சில கருத்துக்கள் ஜனாதிபதி புடினை தனிப்பட்ட முறையில் குறிப்பிடுவதாக தெரிகிறது. யாருடைய இறுதி எச்சரிக்கைகளையும் நாங்கள் பொருட்படுத்தவில்லை . வாஷிங்டனின் கருத்துக்களை பகுப்பாய்வு செய்ய நாங்கள் நேரம் ஒதுக்குவோம். ஜனாதிபதி புடின் அவசியம் என்று கருதினால் நிச்சயமாக பதிலளிப்பார் ” என்று அவர் குறிப்பிட்டார்.

## மக்களின்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

இடையிலான சந்திப்பு (14) ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

சவுதி அபிவிருத்தி நிதியத்தின் உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்களின் தற்போதைய முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதும், புதிய திட்டங்களுக்கான வாய்ப்புகளை அடையாளம் காண்பதும் இந்தக் கலந்துரையாடலின் முக்கிய நோக்கமாகும்.

சவுதி அபிவிருத்தி நிதியத்தால் இலங்கைக்கு வழங்கப்படும் உதவிகள் குறித்து இதன் போது விரிவாக ஆராயப்பட்டது. அரச சேவைகளை மிகவும் வலுவாகவும் செயற்திறனுடனும் செயல்படுத்துவதில் முக்கியமான டிஜிட்டல் மயமாக்கலில் அதிக கவனம் செலுத்த நிதியம் உடன்பாடு தெரிவித்தது.

சவுதி அபிவிருத்தி நிதியத்தால் இலங்கையில் தற்போது செயல்படுத்தப்படும் திட்டங்களைத் தொடர்ந்து முன்னெடுப்பது குறித்தும் இதன் போது கவனம் செலுத்தப்பட்டது.

இலங்கைக்கும் சவுதி அரேபியாவிற்கும் இடையிலான நீண்டகால நட்புறவை நினைவு கூர்ந்த ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்வதில் சவுதி அரேபியா வழங்கிய நிபந்தனையற்ற ஆதரவிற்கு நன்றி தெரிவித்தார்.

புதிய திட்டங்களுக்கு சவுதி அரேபிய அபிவிருத்தி நிதியத்தால் வழங்கப்படும் உதவிகளை, மக்களின் முக்கிய தேவைகளை அடையாளம் கண்டு அந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்யப் பயன்படுத்தப்படும் என்று ஜனாதிபதி கூறினார்.

இலங்கைக்கான சவுதி அரேபிய தூதர் காலித் ஹமூத் நாசர் அல்தசம் அல்கஹ்தானி (Khalid Hamoud Nasser Aldasam Alkahtani), சவுதி அபிவிருத்தி நிதியத்தின் ஆசிய செயல்பாட்டு பணிப்பாளர் நாயகம் சவுத் அயித் ஆர். அல்ஷம்மாரி (Saud Ayid R. Alshammari) மற்றும் நிதியத்தின் பிரதிநிதிகள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இலங்கை அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி , தொழில் அமைச்சரும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சருமான கலாநிதி அனில் ஜெயந்த பெர்னாண்டோ, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிகச் செயலாளர் ரோஷன் கமகே, நிதி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும மற்றும் வெளிநாட்டு வளத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் ஆர்.எம்.எஸ்.பி.எஸ். பண்டார ஆகியோரும் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர்.

## மஹர...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

பாதுகாப்புக்கு எந்த வித அச்சுறுத்தல்களும் ஏற்படாத வகையில் மஹர பள்ளியை மீளத் திறப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமென பிரதியமைச்சர் முனீர் முலப்பர் தெரிவித்தார்.

பாதுகாப்பு காரணங்களினால் 2019 முதல் மூடப்பட்டிருக்கும் மஹரைப் பள்ளி குறித்து ஆராய்வதற்காக பிரதியமைச்சர் முனீர் முலப்பர் கடந்த திங்கட்கிழமை இப் பள்ளிக்கு நேரடியாக வந்து சிறைச்சாலை அதிகாரிகள் மற்றும் பிரதேச வாசிகளுடன் கலந்துரையாடினார்.

மஹர சிறைச்சாலை வளாகத்திற்குள் அமைந்துள்ள பள்ளிவாசலுக்கு தேசிய ஒருமைப்பாட்டு பிரதி அமைச்சர் முனீர் முலப்பர் இன்று (14) கண்காணிப்பு விஜயம் மேற்கொண்டார்.மூ

முஸ்லிம் சிறைச்சாலை அதிகாரிகளின் மத அனுஸ்டானங்களுக்காக நூறு ஆண்டுகளுக்கும் மேலாக இயங்கி வரும் இந்தப் பள்ளிவாசல் நிர்மாணிக்கப்பட்டது. மஹர சிறைச்சாலையைச் சுற்றி வசிக்கும் முஸ்லிம் சமூகத்தின் மத நடவடிக்கைகளுக்காகவும் பயன்படுத்தப்பட்ட இந்தப் பள்ளிவாசல், பாதுகாப்பு காரணங்களுக்காக 2019 முதல் மூடப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியைச் சுற்றியுள்ள பகுதியில் வசிக்கும் சுமார் 300 முஸ்லிம் குடும்பங்களுக்கு தமது மதஅனுஸ்டானங்களை மேற்கொள்ள அருகாமையில் வேறு பள்ளிவால் இல்லாத நிலையில் சிறைச்சாலை வளாகத்திற்குள் அமைந்துள்ள இந்தப் பள்ளிவாசலில் தங்கள் மத நடவடிக்கைகளை நடத்துவதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்யுமாறு தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருகின்றனர். இந்த நிலையில் சிறைச்சாலை அதிகாரிகள் மற்றும் கிராம மக்களுடன் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான சாத்தியமான நடவடிக்கைகள் குறித்து பிரதி அமைச்சர் கலந்துரையாடல் நடத்தினார்.

கடந்த அரசாங்கங்களுக்கும் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டதாகவும், அதற்கான தேவையான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை என்றும் வலியுறுத்திய கிராம மக்கள், சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்துரையாட பிரதி அமைச்சர் மேற்கொண்ட இந்த முயற்சியை பாராட்டினர்.

சிறைச்சாலைக்குள்ளும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படாத வகையில் முஸ்லிம் சமூகத்தினர் இந்தப் பள்ளிவாசலுக்குள் தங்கள் மத அனுஸ்டானங்களை மேற்கொள்ள வாய்ப்பு வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடி பிரச்சினையைத் தீர்க்க அவசர நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று பிரதி அமைச்சர் இங்கு தெரிவித்தார்.

கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பிரகீத் மதுரங்க, சிறைச்சாலை அதிகாரிகள் மற்றும் அருகிலுள்ள கிராம மக்கள் குழு இந்த கண்காணிப்பு விஜயத்தில் கலந்து கொண்டனர்.

## உள்ளூராட்சி...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்ளுராட்சி தேர்தல் முடிவுகளின் பின்னர் தேசிய மக்கள் சக்தி கூட்டமைப்பில் அதிகாரத்தை கைப்பற்றலை எந்த கட்சியும் செய்யவில்லை உலகத்தில் எந்த அரசாங்கமும் செய்யவில்லை.

உலக சாதனை படைத்த தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கிழக்கில் பிள்ளையானுடன் ஆட்சி, குருநாகலில் ரிஷாட்டுடன், காலியில் மொட்டுவுடன் பேருவளையில் ஐக்கிய மக்கள் சக்தியுடன் நுவரெலியாவில் தொண்டமானுடன் இவ்வாறே உள்ளூராட்சி சபைகளை கைப்பற்றியுள்ளது.

ஐக்கிய தேசிய கட்சியின் ரணில் மற்றும் மகிந்த ஆகியோர் இவ்வாறு ஆட்சி அமைக்கவில்லை என்றார்.

தேசிய மக்கள் சக்தியின் கன்னித்தன்மைக்கு களங்கம் ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

## பாடசாலை...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

அமைச்சில் இடம்பெற்றது.

இதன்போது, 2025 ஆம் ஆண்டிற்கான முழு சீருடைத் தேவையும் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கும் சான்றிதழ்கள் இலங்கைக்கான சீனத் தூதர் திரு. Qi Zhenhong உடன் பரிமாறிக் கொள்ளப்பட்டது.

## அமெரிக்க...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

ட்ரோஸ் மற்றும் ஏனைய இனக் குழுக்களிடையே ஏற்பட்டுள்ள மோதல்கள் குறித்து கவலை கொண்டுள்ளோம்.மோதல் விரைவில் முடிவுக்கு வரும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

சிரியாவின் பாதுகாப்பு அமைச்சகம், ஜனாதிபதி மாளிகை அருகே இஸ்ரேலிய வான்வழித் தாக்குதல்: ஒருவர் பலி, 18 பேர் காயம்

சிரியாவின் பாதுகாப்பு அமைச்சகம் மற்றும் தலைநகர் டமாஸ்கஸில் உள்ள ஜனாதிபதி மாளிகை அருகே இஸ்ரேலிய இராணுவம் வான்வழித் தாக்குதல்களை நடத்தியுள்ளது. இந்தத் தாக்குதல்களில் குறைந்தது ஒருவர் கொல்லப்பட்டதாகவும், 18 பேர் காயமடைந்ததாகவும் கூறப்படுகிறது.

தென் சிரியாவில் ட்ரூஸ் மற்றும் பாதுகாப்புப் படைகளுக்கு இடையே மோதல்கள் நடந்த பகுதியில் இருந்து சிரிய அரசாங்கப் படைகள் திரும்பப் பெறப்படாவிட்டால், தாக்குதல்களை அதிகரிப்பதாக இஸ்ரேல் அச்சுறுத்தியதைத் தொடர்ந்தே இந்தச் சமீபத்திய தாக்குதல்கள் நடந்துள்ளன.

இந்தச் சம்பவங்கள் குறித்து கருத்து தெரிவித்த அல் ஜசீராவின் மூத்த அரசியல் ஆய்வாளர் மர்வான் பிஷாரா, இஸ்ரேல் ”மீண்டும் ஒருமுறை தன்னை புதிய பிராந்திய மேலாதிக்க சக்தியாக தனது அண்டை நாடுகளுக்கு நிரூபிக்க முயற்சிக்கிறது” என்று அவர் கூறினார்.

அமெரிக்காவின் ஆதரவுடன் இஸ்ரேல் பெய்ரூட், டமாஸ்கஸ், தெஹ்ரான் மற்றும் சனா போன்ற நகரங்களில் குண்டுவீச முடிந்தது என்றும், மத்திய கிழக்கில் கொள்கையைத் தீர்மானிக்கும் திறன் தனக்கு இருப்பதாக அது கருதுகிறது என்றும் பிஷாரா மேலும் தெரிவித்தார்.

இஸ்ரேலின் ”முக்கிய நோக்கம் சிரியாவை பிளவுபடுத்துவதும் பலவீனப்படுத்துவதும், ட்ரூஸ் அல்லது குர்துகள் அல்லது அலவைட்டுகள் போன்ற அதன் சிறுபான்மையினரை டமாஸ்கஸில் உள்ள மத்திய அரசுக்கு எதிராக திருப்புவதும் ஆகும்” என்று அவர் கூறினார்.



# ஓரங்கட்டப்பட்ட சிறுபான்மை குழுக்களின் அரசியல் பிரசன்னம்; ஆராய்வு கலந்துரையாடல்

(எம்.எச்.எம். சியாஜ்)

ஓரங்கட்டப்பட்ட சிறுபான்மை குழுக்களின் அரசியல் பிரசன்னம் மற்றும் அதற்கான சவால்கள் தொடர்பாக ஆராயும் வட்டமேசை கலந்துரையாடல் ஒன்று புத்தளம் கச்சேரி வீதியில் அமைந்துள்ள ஐஸ் டொக் நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் செவ்வாய்க்கிழமை (15) காலை இடம்பெற்றது.

கிழக்கு சமூக அபிவிருத்தி மையமானது சிறுபான்மை உரிமைகள் குழு சர்வதேசத்துடன் இணைந்து ஐரோப்பிய ஒன்றிய நிதி அனுசரணையோடு "இலங்கையில் ஜனநாயகம் மற்றும் பன்மைத்துவத்துக்காக சிறுபான்மையினரை வலுவூட்டல்" என்ற நிகழ்ச்சித் திட்டத்திற்கு கீழ் பல்வேறு சமூக பொருளாதார காரணிகளால் ஓரம் கட்டப்பட்ட சிறுபான்மை குழுக்களுக்கு ஆதரவாக குரல் எழுப்பும் முயற்சியை மேற்கொண்டு வருகிறது.

இந்த வட்டமேசை மாநாட்டினை கிழக்கு சமூக அபிவிருத்தி மையம் ஏற்பாடு செய்திருந்தது.



கிழக்கு சமூக அபிவிருத்தி மைய நிறைவேற்று பணிப்பாளர் புகாரி முஹம்மத் (எல்.எல்.பி) தலைமையில் இந்நிகழ்வு ஆரம்பமானதோடு அவரே பிரதான வளவாளராகவும் கலந்து கொண்டார். இதேவேளை புத்தளம் திட்ட இணைப்பாளர் சுபியாணி பாறூக், திருகோணமலை திட்ட இணைப்பாளர் ஆஷிக் அலாப்தீன், மன்னார் திட்ட இணைப்பாளர் வடிவேல் ரஞ்சன் ஆகியோரும் இந்நிகழ்வை வழி நடாத்தினார்.

இந்நிகழ்வில் புத்தளம் மாநகர சபை பிரதி மேயர் நுஸ்கி நிசார், வென்னப்புவ பிரதேச சபை தவிசாளர் என்டன் சுதீஸ, சிலாபம் நகர சபை உறுப்பினர்களான டீ.விந்தியா ருஷ்யாந்தி, ஜே.ஏ.மஞ்சுள பிரசங்க உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளை பிரதிநிதித்துவப்படுத்தும் குழுக்களின் பிரதி நிதிகளும் கலந்து கொண்டனர்.

புத்தளம் மாவட்டத்தில் வாழ்கின்ற சமூகங்களுக்குள் நலிவுற்ற நிலையில் இருக்கின்ற சிறுபான்மை குழுக்களுடைய அரசியல் பங்கு பற்றுதல் மற்றும் அவர்கள் தொடர்ந்து எதிர்கொண்டு வருகின்ற சமூகப் பிரச்சினைகள் தொடர்பாக மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் சிறுபான்மை சமூக குழுக்களை பிரதிநிதித்துவம் செய்கின்ற பெண்கள் மற்றும் இளைஞர்கள் ஆகியோரும் இந்த வட்டமேசை கலந்துரையாடலில் பங்கேற்றனர்.

இந்த கலந்துரையாடலில் குறிப்பாக உள்ளூராட்சி மன்றங்களில் தொடர்ந்தும் பிரதிநிதித்துவம் அற்றவர்களாக காணப்படுகின்றன ஓரங்கட்டப்பட்டுள்ள சிறுபான்மை குழுக்களுடைய பிரதிநிதிகள் அதிலும் குறிப்பாக பெண்கள் மற்றும் இளைஞர்கள் உள்ளக ஆட்சிக்கான அரசியல் தளத்தில் பங்குபற்றுவதற்குள்ள சமூக மற்றும் தனிப்பட்ட சவால்கள் அல்லது தடைகள் அவர்களது தீர்க்கப்படாத அடிப்படை பிரச்சினைகள் ஆகியன அந்த

அந்த குழுக்களின் பிரதி நிதிகளாலேயே அடையாளப்படுத்தப்பட்டதோடு எதிர்காலத்தில் உள்ளூராட்சி மன்றங்களின் வினைத்திறன் மிக்க செயற்பாடுகளால் அவை எவ்வாறு களையப்படலாம் அல்லது குறைக்கப்படலாம் என்பது பற்றியும் இந்த பிரச்சினைகளுக்கான நீடித்திருக்கக் கூடியதும் சாத்தியமானதுமான நேர்மறை தீர்வுகளுக்கான முயற்சிகளை உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள் இக்குழுக்களையும் இணைத்துக் கொண்டு எவ்வாறு மேற்கொள்ளலாம் என்பது பற்றியும் ஆராயப்பட்டன.

## முக்கிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பாடுகளுக்கு அமைவாக பணம் தூய்தாக்கல், அதனுடன் இணைந்த ஊகக் குற்றங்கள் மற்றும் பயங்கரவாதத்திற்கான நிதியளித்தல் என்பவற்றுடன் தொடர்புடைய நிதியியல் உளவறிதல்களைப் பரிமாறிக்கொள்வதற்காக இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் வசதியளிக்கின்றது.

லக்ஷம்பேர்க் நகரத்தில் நடைபெற்ற எக்மன்ட் குழுமத்தின் 31ஆவது முழுநிறைவுக் கூட்டத்தின் போது, 2025 ஜூலை 09ஆம் திகதியன்று இவ்வொப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளதாக, இலங்கை மத்திய வங்கியின் தொடர்பாடல் திணைக்களம் அறிவித்துள்ளது.

உலகம் முழுவதிலுமுள்ள நிதியியல் உளவறிதல் பிரிவுகள் தகவல்களை பகிர்ந்துக்கொள்வதனூடாக அவற்றின் சர்வதேசரீதியான இணைத்தரப்பினர்களுடன் ஒத்துழைப்புக்களை பேணிவளர்ப்பதற்கு புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கைச்சாத்திடுகின்றன. சிக்கலான எல்லை கடந்த குற்றவியல் வலையமைப்புகளை அடிக்கடி ஈடுப்படுத்துகின்ற பணம் தூ யதாக்கல்ஃ பயங்கரவாதி நிதியிடலுக்கெதிரான உலகளாவிய போராட்டத்தில் இவ்வொத்துழைப்பு இன்றியமையாததாகும்.

ஓமானின் நிதியியல் தகவலுக்கான தேசிய நிலையம், குற்றம், பணம் தூ யதாக்கல் அல்லது பயங்கரவாதி நிதியிடல் நடவடிக்கைளுடன் இணைந்த பணப்பெறுகைகளுடன் தொடர்புடையதாகவிருக்கின்ற அல்லது அதனுடன் இணைந்தவை என சந்தேகிக்கப்படுகின்ற அறிக்கைகளையும் தகவல்களையும் பெற்றுக்கொள்வதற்கும், பகுப்பாய்வு செய்வதற்கும், கோருவதற்கும் பொறுப்பாணை யளிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் நிதியியல் உளவறிதல் பிரிவு இலங்கைக்கான பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் கட்டமைப்பிற்கான நோக்கு மையம் என்ற வகையில் பணம் தூயதாக்கல் / பயங்கரவாதி நிதியிடல் தொடர்பான சந்தேகத்திற்குரிய நிதியியல் கொடுக்கல்வாங்கல்கலுடன் அல்லது வேறேதேனும் சட்டத்திற்கு புறம்பான நடவடிக்கைகளுடன் தொடர்புடைய தகவல்களைச் சேகரித்து, பகுப்பாய்வு செய்து பரவசெய்கின்றது.

நிதியியல் உளவறிதல் பிரிவின் பணிப்பாளர் முனைவர் சுபாணி கீர்த்திரட்ண, ஓமானின் நிதியியல் தகவலுக்கான தேசிய நிலையத்தின் நிறைவேற்றுத் தலைவர் கேணல் அப்துல் ரஹ்மான் அமுர் அல்-கியூமி ஆகியோர் உரிய நிறுவனங்கள் சார்பில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர். இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதன் மூலம், உளவறிதல் நோக்கங்களுக்காக தகவல்களைப் பகிர்ந்துக்கொள்ளும் பொருட்டு, தற்போது இலங்கையின் நிதியியல் உளவறிதல் பிரிவானது 46 வெளிநாட்டு இணைத்தரப்பினர்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை கைச்சாத்திட்டுள்ளது.

நிதியியல் உளவறிதல் பிரிவின் பணிப்பாளர் முனைவர் சுபாணி கீர்த்திரட்ண (வலம்) மற்றும் ஓமானின் நிதியியல் தகவலுக்கான தேசிய நிலையத்தின் நிறைவேற்றுத் தலைவர் கேணல் அப்துல் ரஹ்மான் அமுர் அல்-கியூமி (இடம்) புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுகின்றனர்.

## ஈராக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீ விபத்துக்கான காரணம் உடனடியாகத் தெரியவில்லை, ஆனால் விசாரணையின் ஆரம்ப முடிவுகள் 48 மணி நேரத்திற்குள் அறிவிக்கப்படும் என்று அம் மாகாணத்தின் ஆளுநர் கூறியுள்ளார்.

## சுஜீவவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உத்தரவிட்டுள்ளது.


இன்று இடம்பெற்ற இவ்விசாரணையின்போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதிநிதிகளான ரஞ்சித் மத்தும பண்டார, கபீர் ஹாஷிம், மனோ கணேசன் மற்றும் முஜிபுர் ரஹ்மான் ஆகியோர் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார்கள்.

## கடந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெண்கள், ஆகக்கூடுதலான 38, 806 பேர் குவைத் நாட்டுக்கே சென்றுள்ளனர்.டுபாய் நாட்டுக்கு 28,973 பேர், 21,958 பேர் கட்டார், சென்றுள்ளனர்.

அதேவேளை ஜப்பான் 6073 பேர், தென்கொரியாவுக்கு 3134 பேர், கடந்த 6 மாத காலங்களில் இலங்கையர் வெளிநாட்டுக்குச் சென்று 3.73 பில்லியன் டொலர்களை அந்நியச் செலவானியை உழைத்து அனுப்பியுள்ளனர் இதன் படி 2025 ஆம் ஆண்டு இறுதியில் 7 பில்லியன் அமெரிக்க் டொலர் பணப்பரிமாறற் வருவாயை இலங்கை பெற்றுக் கொள்ள வாய்ப்பு உள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2025 JULY 17 - THURSDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# வயம்ப பல்கலை நிகழ்வு அரசு தரப்பு அசமந்தம்?

உலகின் 90 நாடுகளுக்கு உதவி வழங்கும் சவூதி அபிவிருத்தி நிதியம் இலங்கையில் 15 அபிவிருத்தி திட்டங்களுக்கு நிதி வழங்கியிருப்பதோடு அதன் பெறுமதி 425 மில்லியன் டாலர்களுக்கும் அதிகமாகும். இலங்கையின் கல்வித்துறை மேம்பாட்டுக்கும் மனித வள அபிவிருத்திக்கும் இந்த முதலீடுகள் பயன்படுத்தப்படுவதாக சவூதி அரேபியாவின் இலங்கைத் தூதுவர் காலித் ஹமூத் அல் கஹ்தானி தெரிவித்துள்ளார். 1975 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட சவூதி அபிருத்தி நிதியம் உலகம் பூராக 90க்கும் மேற்பட்ட நாடுகளில் நிலைத்த பயனுடைய திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு அர்ப்பணிப்புடன் உதவி வருகிறது.

சில நாடுகளைப் போன்று உள்ளக நோக்கங்களுக்காக அன்றி சவூதி அரேபியா உதவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இலங்கைக்கு உதவும் முஸ்லிம் நாடுகள் அனேகமானவை எவ்வித நிபந்தனைகளும் இன்றி உதவி வருவதும் குறிப்பிடத்தக்கது. கண்டியில் கட்டுக் கஸ்தோட்டைப் பாலத்தை குவைத் அரசாங்கம் நிர்மாணித்து கொடுத்தது. அதேபோன்று சவூதி அரேபியா கொழும்பு பெரியாஸ்பத்திரியில் பல குறிப்பிடத்தக்க அபிவிருத்தி முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. சவூதி நிதிய உயர் அதிகாரிகள் இலங்கை விஜயத்தை முன்னிட்டு சவூதி அரேபியா தூதுவர் விடுத்துள்ள செய்தியில் மிகத் தெளிவாக தெரிவித்திருக்கின்றதாவது, இந்தத் திட்டமானது எவ்வித உட்புற நோக்கங்களோ, நிபந்தனைகளோ இல்லாமல் பரஸ்பர மரியாதை மற்றும் ஒத்துழைப்பினை அடிப்படையாகக் கொண்டு உண்மையான அபிவிருத்தி, கூட்டுறவு என்பதைச் சாதிக்கலாம் என்பதற்கான ஒரு முன்னுதாரணமாக உள்ளது என்று தூதுவர் காலித் ஹமூத் அல் கஹ்தானி தனது செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த திங்களன்று சவூதி உதவி திட்டத்தின் முக்கியதொரு திட்டமான வயம்ப பழ்கலைக்கழக திட்டம் சவூதி உயரதிகாரிகளது பிரசன்னத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. பல அபிவிருத்தி முயற்சிகளை உள்ளடக்கிய இந்த நிகழ்வின் அங்குராப்பணம் வயம்ப பழ்கலைக்கழக வளாகத்தில் இடம்பெற்றது. சவூதி அரேபியாவின் உயரதிகார்கள் பலரும் வருகை தந்திருந்த போதிலும், துரதிஷ்டவசமாக இலங்கை அரசாங்கத்தின் சார்பில் அமைச்சர்கள் எவருமே இந்நிகழ்வில் கலந்து கொள்ளவில்லை. இது சவூதி அரேபியத் தரப்பினரை அதிருப்திக்குள்ளாக்கி இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

உண்மையில் இலங்கைக்கு எந்தவித எதிர்பார்ப்புகளோ நிபந்தனைகளோ இன்றி உதவுகின்ற சவூதி அரேபியா போன்ற ஒரு நாட்டின் முயற்சிக்கு இலங்கை அரசாங்கம் முக்கியத்துவம் கொடுக்காமையானது கவலைக்குரியது என்று தான் சுட்டிக்காட்டப் படுகின்றது. அமைச்சுக்களின் செயலாளர்கள் தான் அங்கிருந்தார்களே தவிர இந்த அபிவிருத்திகளோடு தொடர்புபட்ட எந்த அமைச்சரும் இருக்கவில்லை. பிரதி சபாநாயகர் டாக்டார். ரிஸ்வி சாலி மாத்திரம் அங்கு விஜயமளித்திருந்த போதிலும், அவர் பொதுவான ஒரு முஸ்லிம் பிரதிநிதியாகத்தான் சென்றிருக்கின்றார். ஆனால் அரசாங்கத்தின் சார்பில் அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்கள், குறிப்பாக வருகை தருவதாகமும் தெரிவிக்கப்பட்டு இருந்த பிரதமரையும் காணவில்லை வேறு அமைச்சர்கள் எவரையும் காணவில்லை.

உண்மையில் சவூதி தரப்பில் இது அதிருப்தியை ஏற்படுத்திருப்பதாக உத்தியோகபூர்வமற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன. எவ்விதமான நிபந்தனைகளும் இல்லாமல் உதவும் சவூதி போன்ற நாடுகளின் நிகழ்வுகள் குறித்து அரசாங்கம் அவ்வளவு அக்கறை காட்டாமல் இருப்பது கவலைக்குரியது. சவூதித் தூதுவர் மற்றும் சவூதிப் பிரதானிகள் ஜனாதிபதியை சந்தித்த போதும் எதிர்காலத்திலும் இந்த அபிவிருத்திக்கு உதவுவதாக ஜனாதிபதியிடம் தெரிவித்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல. சவூதி அரேபியாவின் நிதிச் சீர்திருத்தம் தொடர்பாகவும் தனது இணக்கப்பாட்டை தெரிவித்திருக்கிறது.

இந்த நிலையில் இலங்கை அரசாங்கம் ஏன் இவ்வாறான அசமந்தப் போக்கை கடைப்பிடிருக்கிறது என்று வினவப்படுகிறது. துரதிஷ்டவசமாக இது தொடர்பாக அரசு கூடுதல் கரிசனை செய்து நமது நாட்டுக்கு நிபந்தனை இன்றி உதவுகின்ற நாடுகளுக்கும், அந் நாடுகளின் நிகழ்வுகளுக்கும் முன்னுரிமையளிக்க வேண்டும் என்பதுதான் எமது கோரிக்கையாகும்.

சில நாடுகள் இலங்கையில் தமது கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு நிபந்தனையிட்டுத் தான் உதவி செய்கின்றன. இந்நிலையில் சவூதி அரேபியா உட்பட பல நாடுகள் இலங்கைக்கு நிபந்தனைகள் கட்டுப்பாடுகள் எதுவும் இல்லாமல் உதவிசெய்கின்றன. எனவே, இந்த விடயத்தில் அரசாங்கம் எதிர்காலத்தையும் கருதி தூரநோக்கோடு செயல்படுவது அவசியம் என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

தேசிய பத்திரிகையாக (மின்னிதழ்) "உதயம்"
இன்றிலிருந்து வாசகர்கள் மத்தியில் வலம்வரவுள்ளது.
இப் பத்திரிகைக்கு தங்களின் பேராதரவை எதிர்பார்ப்பதுடன் கீழுள்ள QR ஐ Scan செய்வதனூடாக எமது வட்ஸ்அப் குழுமத்தில் இணைந்து ஒவ்வொரு வெளியீட்டின் பிரதிகளையும் இலவசமாக பார்வையிடலாம்...
அத்துடன், உங்களது பிரதேசங்களில் இடம்பெறும் செய்திகளையும் எமது மின்னஞ்சல் ஊடாக எமக்கு அனுப்பி வைக்க முடியும்.
editor.uthayam@gmail.com

## இஸ்ரேலிய சுற்றுலா பயணிகளின்;

# சட்டவிரோதமான விடயங்களை தடுக்காவிடின் பாதுகாப்பு அச்சுறுத்தல்களை நாடு எதிர்கொள்ளும்

## நீதிக்கான மய்யத்தின் தலைவர் எச்சரிக்கை!

(பாறுக் ஷிஹான்)

இஸ்ரேலிய சுற்றுலா பயணிகளினால் மேற்கொள்ளப்படும் சட்டவிரோதமான விடயங்களை தடுக்காவிடின் பாதுகாப்பு அச்சுறுத்தல்களை நாடு எதிர்கொள்ளும் என நீதிக்கான மய்யத்தின் தலைவர் சட்ட முதுமாணி ஷஃபி எச். இஸ்மாயில் தெரிவித்தார்.

அண்மைக்காலமாக இலங்கையில் இஸ்ரேலிய நாட்டு உல்லாச பயணிகளால் ஏற்படும் விடயங்கள் குறித்து விசேட செய்தியாளர் சந்திப்பு அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பகுதியில் உள்ள அதன் அலுவலகத்தில் இன்று நடைபெற்றது.

இதன்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

இன்று இஸ்ரேலிய உல்லாசப்பயணிகளினால் இலங்கைக்கு பாரிய அச்சுறுத்தல் நிலவி வருகின்றது. அதாவது சபாத் ஹவூஸ் என்ற பெயரில் மதத்தை பரப்புவதற்காக மேற்கொள்ளப்படும் நிர்மாணம் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். இந்த விடயத்தில் அரசாங்கம் ஒரு மெத்தன போக்கில் உள்ளதை காண முடிகின்றது.

எனவே தான் உடனடியாக இந்த விடயத்தில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக்கொள்கின்றேன் என்றார்.

# "வாழ்க்கைப் போராட்டம்" நூல் வெளியீடு!

(பீ.எம்.முக்தார்)

நாடறிந்த பிரபல சமூக சேவையாளரும் தர்கா நகர் நஜீப் ஹாஜியார் கல்வி நிலைய ஸதாபகருமான கலாநிதி நஜீப் ஹாஜியார் பின்த் அமீர் ஆலிமின் வாழ்க்கை குறிப்புகள் தொர்பான "வாழ்க்கைப் போராட்டம்" எனும் நூலின் வெளியீட்டு விழா எதிர் வரும் 19ம் திகதி சனிக்கிழமை பி.ப 3.30 மணிக்கு தர்கா நகர் லோடஸ் வீதியில் உள்ள மர்ஹபா வரவேற்பு மண்டபத்தில் மிக விமர்சையாக நடை பெறும்.

நஜீப் ஹாஜியார் கல்வி நிலையம் ஏற்பாடு செய்துள்ள இவ் விழாவுக்கு நிஹ்மதுல்லா நஜீப் தலைமை வகிப்பார்.

லேக் ஹவுஸ் நிறுவனத்தின் வெளியிடான தினகரன் மற்றும் தினகரன் வாரம் மஞ்சரி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் தே.செந்தில் வேலவர் பிரதம அதிதியாகவும் இணை ஆசிரியர் மர்லின் மரிக்கார் கௌரவ அதிதியாகவும் கலந்து கொள்வர்.

பேருவளை சீனன் கோட்டையைச் சேர்ந்த எழுத்தாளரும் கவிஞருமான பாயிஸா கைஸ் வரவேற்புரை நிகழ்த்துவதோடு பேருவளை பிராந்திய எழுத்தாளர் சங்க செயலாளர் பஸ்மி ஹமீத் நூல் விமர்சனம் செய்வார்.

டாக்டர் ஹுஸ்னா நஜீப் நன்றியுரை நிகழ்த்துவார்.



# சவூதி அபிவிருத்தி நிதியத்தின் 28 மில்.டொலர் நிதியுதவியில் வயம்ப பல்கலைக்கழக அபிவிருத்தி திட்டம் திறந்து வைப்பு!









2025 ஜூலை 14ம் திகதி, வயம்ப பல்கலைக்கழக நகரமைப்புத் திட்டத்தின் திறப்பு விழாவில் பங்கேற்றதில் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன்.

- இவ்வாறு இலங்கைக்கான சவூதி அரேபிய தூதுவர் காலித் ஹமூத் அல்கஹ்தானி அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது.

இந்த கல்வி மற்றும் வளர்ச்சித் திட்டம், சவுதி அரேபியா மற்றும் இலங்கை ஆகிய இரு நாடுகளுக்குமிடையேயான ஆழமான உறவுகளை பிரதிபலிக்கிறது.

சவுதி அபிவிருத்தி நிதியம், இலங்கை குடியரசில் சுமார் 425 மில்லியன் அமெரிக்க டொலருக்கும் மேற்பட்ட பெறுமதி கொண்ட 15 முக்கிய திட்டங்களுக்கு நிதியளித்துள்ளது.

இந்த வயம்ப பல்கலைக்கழக திட்டமும் சவூதியின் முக்கிய திட்டங்களில் ஒன்றாகும்.

இலங்கையில் மனித வள அபிவிருத்தியில் முதலீடு செய்வதும், இலங்கையின் கல்வித்துறையின் எதிர்காலத்தை அபிவிருத்தி செய்வதும் முக்கியமானவை என்பதில் சவூதி அரேபிய கொண்டுள்ள நம்பிக்கையே இந்த திட்டங்களை செயற்படுத்த காரணமாக அமைந்துள்ளன.

பல்கலைக்கழகங்களை கட்டுதல், அபிவிருத்தி செய்தல் என்பது வெறும் கட்டிடங்களை நிர்மாணிப்பது மட்டுமல்ல, மாறாக அது ஒரு பிரகாசமான எதிர்காலத்திற்கான அடித்தளமாகவும், மக்களுக்கிடையேயான புரிதலையும் அறிவையும் இணைக்கும் பாலமாகவும் அமைகிறது.

இந்த திட்டம், எவ்வித உட்புற நோக்கங்களோ அல்லது நிபந்தனைகளோ இல்லாமல், பரஸ்பர மரியாதை மற்றும் ஒத்துழைப்பை அடிப்படையாகக் கொண்ட உண்மையான அபிவிருத்தி கூட்டுறவுகள் என்னவெல்லாம் சாதிக்கலாம் என்பதற்கான ஒரு முன்னுதாரணமாக உள்ளது.

1975 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டதிலிருந்து, சவூதி அபிவிருத்தி நிதியம், உலகம் முழுவதும் அபிவிருத்தி மற்றும் அமைதிக்காக சேவையாற்றும் சவூதியன் கொள்கையின் அடிப்படையில், 90க்கும் மேற்பட்ட நாடுகளில் நிலைத்த பயனுடைய திட்டங்களை செயற்படுத்த மிகுந்த முயற்சியுடன் செயல்பட்டு வருகிறது.

மேலும் இரு புனித மஸ்ஜித்களின் பாதுகாவலர் மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் மற்றும் பிரதமர் மற்றும் பட்டத்து இளவரசர் முஹம்மத் பின் சல்மான், மேலும் இந்த திட்டத்தின் வெற்றிக்கு பங்களித்த அனைத்து செயற்குழுக்கள், இலங்கையின் கல்வி அமைச்சில் உள்ள எமது நணபர்கள் அனைவருக்கும் எனது எனது மனமார்ந்த நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இறுதியாக, வயம்ப பல்கலைக்கழகம் அறிவின் கலங்கரை விளக்கமாகவும் நம்பிக்கையின் இல்லமாகவும் இருப்பதையும், மேலும் செழிப்பான மற்றும் பாதுகாப்பான இலங்கையை கட்டியெழுப்ப உதவும் புது தலைமுறைகளை உருவாக்கும் தளமாகவும் அமையும் என நான் எதிர்பார்க்கிறேன் - என்றார்.

# புதிய கல்விச் சீர்திருத்தங்கள் - 2026

இச்சீர்திருத்தமானது 5 தூண்களின் (ொடைடயசள) கீழ் முன்னெடுக்கப்படுகிறது.

1. பாடங்களின் கலைத்திட்ட மறுசீரமைப்பும் அபிவிருத்தியும்
2. வளவாளர் பயிற்சியும் ஆசிரிய பயிற்சியும்
3. நிருவாக மறுசீரமைப்பும் உட்கட்டமைப்பு அபிவிருத்தியும்
4. கணிப்பீடும் மதிப்பீடும்
5. சமூக விழிப்பூட்டலும் பிரசாரமும்

என்பன அந்த 5 தூண்களும் ஆகும்.

ஆரம்ப கல்வியின் பாடங்கள்

- தமிழ் (வாசிப்பு நூலும் செயல் நூலும்)
- ஆங்கிலம்
- இரண்டாம் தேசிய மொழி
- கணிதம்
- சமயமும் விழுமிய கல்வியும்
- அடிப்படை விஞ்ஞானமும் சுற்றாடல் சார்ந்த செயல்பாடும்.
- ஒன்றிணைந்த அழகியல்
- சுகாதாரமும் உடற்கல்வி யும்.
- இணைப்பாட விதான செயற்பாடுகள்.

ஆரம்ப பிரிவுகள் தற்போது உள்ளது போலவே முதன்மை நிலைகள் கொண்டிருக்கும்.

இடைநிலைக் கல்வி

மொடியூல் முறையும் GPA முறையும் தரம் 6 தொடக்கம் தடைமுறைக்கு வருகிறது.

**35 CREDITS**

தரம் 6-9 வரை 14 பாடங்கள் காணப்படும்.

அத்தியாவசிய (நுளளநவெயைட ளரடிதநஉவள) பாடங்கள் 14க்கும் விளையாட்டு மற்றும் மாணவர் சங்கங்கள் மற்றும் கழகங்களின் பங்குபற்றலுக்குமாக 30 கிறெடிட்கள் (30 உசநனவைள) வழங்கப்படும்.

தொடருறு கல்விக்கு வழிப்படுத்தும் மொடியூல் செயற்பாட்டுக்காக ஒவ்வொரு தவணைக்கும் 3 கிறெடிட்கள் (03 உசநனவைள) கிடைக்கும்.

வாழ்க்கைத் தேர்ச்சியுடன் கூடிய பன்முனைத்திறன்களுக்காக (Transversal skills) 2 கிறெடிட்கள் (2 credits) கிடைக்கும்.

க. பொ.த (சா/த) பரீட்சைக்கு வரலாறு கட்டாய பாடமில்லை. ஆனால் தெரிவுப் பாடமாக (Elective subject) வருகிறது.

30 கிறெடிட்களுக்குரிய பாடங்கள்

1. தமிழ் மொழி
2. ஆங்கில மொழி
3. சிங்கள மொழி (இரண்டாம் தேசிய மொழி)
4. கணிதம்
5. விஞ்ஞானம்
6. சுகாதாரமும் உடற்கல்வி யும்
7. ஐஊவு
8. வாழ்க்கைக்கான தொழினுட்பம்
9. புவியியல்
10. வரலாறு
11. குடியுரிமை கல்வி
12. சமயமும் விழுமிய கல்வியும்
13. அழகியல் கல்வி
14. முயற்சியாண்மையும் நிதிசார் எழுத்தறிவும்
15. விளையாட்டு மற்றும் சங்கங்கள் கழகங்களில் பங்குபற்றுதல் (participation only)

03 கிறெடிட்களுக்குரிய பாடங்கள்

தொடருறு கல்வி அல்லது உயர்கல்வி நோக்கிய சரியான துறையை நோக்கி மாணவர்களை வழிகாட்டும் வகையில் தமது பிரதேசத்தில் செய்யக்கூடிய தொழில் சந்தைக்கு பொருந்தும் விதமாக ஒவ்வொரு அத்தியாவசிய பாடத்துடனும் தொடர்புடையதாக ஆனால் தவணைக்கு எனும் அடிப்படையில் இதற்கான மொடியூல் 03 கிறெடிட்களுக்காக அமைகிறது.

02 கிறெடிட்களுக்குரிய பாடங்கள்

பின்வரும் 09 பாடங்களிலிருந்து விருப்பமான 02 பாடங்களை மட்டும் தெரிவு செய்ய வேண்டும்.

1. இலக்கிய நயம்
2. ஊடக கற்கை (தரம் 8 தொடக்கம் களத்தரிசிப்புக்கள் அவசியம்)
3. சேவைத்துறைக் கல்வி
4. உலகளாவிய போக்கு கல்வி பற்றிய கல்வி
5. சமூக சேவை
6. சுகாதாரமும் விளையாட்டும்
7. அழகியல் நயம்
8. தொழிலுக்கான ஆயத்தப் படுத்தல்
9. எண்ணிம குடியியல்

தரம் 9 ல் மாணவர்களுக்கு தேசிய அளவிலான பரீட்சை பரீட்சை திணைக்களத்தால் நடத்தப்படுவதுடன் மாகாண/ வலய மட்டத்தில் உளப்பாங்கு (Psychometric) பரீட்சையும் நடத்தப்படும்.

இந்த உளப்பாங்குப் பரீட்சை ஞமடைட வநளவ எனப்படுகிறது.

தரம் 10 (2028) தொடக்கம் - 35 கிறெடிட்கள்

கட்டாய பாடங்கள் 5 (18 உசநனவைள)

தொடருறு கல்விக்கான பாடங்கள் 2 (14 உசநனவைள)

வாழக்கைத்திறன்கள் ( 03 உசநனவைள)

அத்தியாவசிய பாடங்கள்
Essential Subjects (14 credits)

1. தமிழ் மொழி
2. ஆங்கில மொழி
3. கணிதம்
4. விஞ்ஞானம்
5. சமயமும் விழுமிய கல்வியும்

( இப்பாடத்துக்கு 2 உசநனவைள மற்றையவற்றுக்கு தலா 03 உசநனவள)

**தெரிவும் பாடங்கள் 2**
**Two Elective Subjects**

பின்வரும் பாடஙாகளில் இருந்த 2 பாடங்களை மட்டும் மாணவர் தரம் 10ல் தெரிவு செய்வார்.

- இரண்டாம் தேசிய மொழி
- **ICT**
- வரலாறு
- குடியுரிமை கண்கலங்கி
- சுகாதாரமும் உடற்கல்வியும்

- தொழினுட்பம் (பின்வருவனவற்றுள் ஒன்று: விவசாய முகாமைத்துவ தொழினுட்பம், வடிவமைப்பும் பொறியியல் தொழினுட்ப மும், உணவு மற்றும் நுகர்வுக் தொழினுட்பம், சித்திர வேலைப்பாடுகள் உற்பத்தி கைத்தொழில், நீரக உயிர்வளி தொழினுட்பம்)
- புவியியல்
- அழகியல் கல்வி (தற்போதைய அழகியல் பாடங்கள் உள்ளன)
- முயற்சியாண்மையும் நிதிசார் அறிவும்

மேலுள்ள 7 பாடங்களுக்கு மேலதிகமாக மேலும் 7 பாடங்களை மாணவர்கள் தெரிவு செய்து கற்க வேண்டும். நுளளநவெயைட ளுரடிதநஉவ பாடங்கள் 7க்கு மட்டும் இலங்கை பரீட்சை திணைக்களம் இப்போது நடத்துவது போன்று பரீட்சையை நடத்தும். ஆனால் மேலதிக பாடங்கள் 7 க்கும் பரீட்சை திணைக்களம் பரீட்சையை நடத்தாது. மாகாண/ வலய மட்ட பரீட்சை நடைபெறும். இது மாணவரின் சித்தி வீதத்தை பாதிக்காது. ஆனால் உயர்கல்வி பற்றிய தெரிவு எதுவென்பதை உறுதிப்படுத்தும்.

மேலதிக பாடங்கள் பின்வருமாறு 4 தொகுதிகளாக உள்ளன.

வகை -1. STEM (13 பாடங்களில் 4 ஐ தெரிவு செய்ய வேண்டும்.)

- பிரயோக கணிதம்
- தூய கணிதம்
- உயிரியல்
- இரசாயனவியல்
- பௌதிகவியல்

- சுகாதாரமும் உடற்கல்வி யும்
- கொம்பியூட்டர் சையன்ஸ்
- டேட்டா சைன்ஸ்
- விவசாய விஞ்ஞானம்
- பொறியியல் தொழினுட்பம்
- உயிர்ப் பொறியியல் தொழினுட்பம்
- உணவு நுகர்வோர் தொழினுட்பம்
- விமானப் போக்குவரத்து கல்வி

வகை 2: மனிதநேயமும.சமூக விஞ்ஞானமும்

- மொழியும் இலக்கியமும்
- ஊடகமும் தொடர்பாடலும்
- வெளிநாட்டு மொழிகள்
- செம்மொழி கள்
- குடியுரிமைக்கல்வி
- வரலாறு
- புவியியல்
- சமூக விஞ்ஞானம்
- தர்க்கவியல்
- அழகியல் பாடங்கள் (தற்போதைய)

வகை 3: முகாமைத்துவமும் முயற்சியாண்மையும்

- பொருளியல்
- கணிதம்
- ஐஊவு
- கணக்கீடு
- வணிக கல்வி
- வணிக புள்ளி வபரவியல்
- முயற்சியால் மையும் நிதிசார் அறிவும்
- வழங்கல் சுழற்சி முகாமைத்துவம்

வகை 4: திறன் பாதை

மூ நிர்மாணமும் உட்கட்டமைப்பும்

- ஆரம்ப கைத்தொழில்
- உற்பத்தி தொழினுட்பம்

வகை 1ல் விரும்பிய 4 பாடங்களை எல்லோரும் கற்க வேண்டும். வகை 2, வகை 3 ஆகிய வகைகளில் ஏதாவது ஒரு வகைக்குள் மட்டும் சென்று 2 பாடங்களை மட்டும் கற்க வேண்டும். வகை 4ல் ஒரு பாடத்தை எடுக்க வேண்டும். இவ்வாறு இந்த 7 பாடங்களும் அமையும்.

க.பொ.த (உ/த) 2032

5 பாடத்துறைகள் (5 ளவசநயஅள)

3 பாடங்கள்

பொது ஆங்கிலம் & GIT

சக்தியூட்டும் மொடியூல்- தமது பாடத்துறை க்கு வலுச்சேர்க்கும் விதமாக டியடயஉெநிநசளழயெடவைல ஐ உருவாக்குவதற்காக அப்பாடத்துறையில் அல்லாத மொடியூல்களை மாணவர்கள் தெரிவு செய்து கற்க வேண்டும்.

உயர்தர பாடத்துறைகள் (Subject streams) பின்வருமாறு அமையும்.

Science stream
Technology stream
Management & Enterpreunership
Humanities & Social Sciences
Vocational Path

50 நிமிட பாடவேளை கொண்ட 7 பாடவேளைகள் ஒரு நாளுக்கு அமையும். இதனால் பாடசாலை நேரம் தற்போதுள்ள தை விட 30 நிமிடங்கள் அதிகரிக்கும்.

# Executive Leadership Development Programme
## எதிர்கால தலைவர்களுக்கான அமானா வங்கியின் வலுவூட்டல்



அமானா வங்கி தனது அறிமுக Executive Leadership Development Programme (ELDP) எனும் உள்ளக 15 வார பயிற்சித் திட்டத்தை வெற்றிகரமாக பூர்த்தி செய்துள்ளதாக அறிவித்துள்ளது. நிறுவனத்தினுள் தூர நோக்குடைய தலைவர்களை இனங்கண்டு அவர்களைத் தயார்ப்படுத்தும் நோக்கில் இந்தத் திட்டம் அமைந்துள்ளது. கனிஷ்டநிலை நிறைவேற்று அதிகாரிகளுக்கு தமது தொழில் நிலையில் சிறப்பாக இயங்கவும், வங்கியினுள் நிறைவேற்று நிலைகளுக்கு உயர்வதற்கு அவசியமான அனுபவத்தை பெற்றுக் கொடுக்கும் வகையிலும் இந்தத் திட்டம் வடிவமைக்கப்பட்டிருந்தது. இந்தத் திட்டத்தை பூர்த்தி செய்த 15 ஊழியர்களை கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் BMICH இல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில், அமானா வங்கியின் முகாமைத்துவ பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி மொஹமட் அஸ்மீர் உட்பட முகாமைத்துவ குழுவின் அங்கத்தவர்களும் கலந்து கொண்டனர்.

ELDP இல் தொழில்நிலை சுழற்சி ஒப்படைகள், தொழிற்பயிற்சி, விசேடத்துவ பயிற்சி, பயிற்சிப் பட்டறைகள் மற்றும் தலைமைத்துவ திறன்களை மேம்படுத்த செயற்திட்ட அடிப்படையிலான பயிற்சிகள், மூலோபாய சிந்தனை மற்றும் தீர்மானமெடுக்கும் ஆற்றல்கள் போன்றன அடங்கியிருந்தன. ஊடாடு (interactive) பயிலல், தக்க நேர கைகோர்ப்பு மற்றும் வலைப்பின்னல்கள் போன்றவற்றுக்காக வடிவமைக்கப்பட்ட இந்தத் திட்டம், பல்வேறு பிரிவுகள் மற்றும் அலகுகளிடையிலான செயற்பாடுகள் மற்றும் வியாபார நடவடிக்கைகளுக்கு பங்குபற்றுனர்கள் வெளிப்படுத்தப்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது. அதன் போது, ஒவ்வொரு பங்குபற்றுனருக்கும் ஒரு ஆலோசனை வழங்குனர் ஒதுக்கப்பட்டு, வழிகாட்டல்கள் வழங்கப்பட்டதுடன், அவர்களின் முன்னேற்றமும் கண்காணிக்கப்பட்டது.

மேற்குறித்த நிகழ்வில் அமானா வங்கியின் முகாமைத்துவ பணிப்பாளரும், பிரதம நிறைவேற்று அதிகாரியுமான மொஹமட் அஸ்மீர் உரையாற்றுகையில், "நிறுவனத்தினுள்ளே எதிர்கால தலைவர்களை உருவாக்குவது என்பதில் அமானா வங்கியைச் சேர்ந்த நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம். இந்த Executive Leadership Development Programme என்பது, திறமையாளர்களை கட்டியெழுப்புவதற்கும், எமது அணி அங்கத்தவர்களை பெருமளவு பொறுப்புகளை ஏற்றுக் கொள்வதற்கு வலுவூட்டுவதற்குமான எமது அர்ப்பணிப்புக்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. இந்த திறமையான தனிநபர்கள் வளர்ச்சியடைந்து, வங்கியின் எதிர்காலத்துக்காக புதிய தலைமைத்துவ நிலைகளில் திகழ்வதை காண்பதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகிறோம்." என்றார்.

இலங்கை மத்திய வங்கியின் அனுமதி பெற்று இயங்கும் நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனமாகவும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட நிறுவனமாகவும் அமானா வங்கி பிஎல்சி திகழ்கின்றது. ஜித்தாவை தளமாகக் கொண்டியங்கும் ஐளனுடீ குரூப் பிரதான பங்காளராக திகழ்கின்றது. IsDB குரூப் 'AAA' தரப்படுத்தலை தன்வசம் கொண்டுள்ள பல்தேசிய அபிவிருத்தி நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனமாக திகழ்வதுடன், 57 நாடுகளில் அங்கத்துவத்தைக் கொண்டுள்ளது. வட்டிசாராத வங்கியியல் மாதிரியை கொண்டுள்ள அமானா வங்கியை, உலகின் உறுதியான 25 இஸ்லாமிய வங்கிகளில் ஒன்றாக ஏசியன் பாங்கர் அமைப்பினால் தரப்படுத்தப்பட்டிருந்தது.

# கஹட்டோவிட்ட முஸ்லிம் பாலிகாவில்

## 6 மாணவிகள் 9 ஏ பெற்று வரலாற்று சாதனை

**(எம்.ஆர்.லுதுபுள்ளாஹ்**
**கஹட்டோவிட்ட)**

கம்பஹா மாவட்டத்தில் இருக்கும் ஒரேயொரு முஸ்லிம் மகளிர் கல்லூரியாக திகழும் கஹட்டோவிட்ட முஸ்லிம் பாலிக்காவில் இருந்து இம்முறை 6 மாணவிகள் அதி விசேட சித்தியை பெற்று பாடசாலைக்கும் ஊருக்கும் பெருமை தேடி கொடுத்துள்ளனர்.

9 பாடங்களிலும் 9யு சித்தி பெற்ற மாணவிகளின் பெயர் விபரங்கள் வருமாறு.

இவர்களின் பெயர் விபரம் முறையே

**1.எம்.ஐ.இபாதா.**
**2.எம்.ஐ.இஷ்ரத் ரஹ்னா**
**3.எம்.ஆர்.ரஹ்மா ஸைனப்.**
**4.எம்.எப்.ஸனா**
**5.எம்.என்.ஸபா**
**6.எம்.ஆர்.எப் அரீஜ்**

இது தவிர 8ஏ,5ஏ,6ஏ அதிவிசேட சித்திபெற்றவர்கள் ஒருவர் வீதமும் 5ஏ அதிவிசேட சித்தி பெற்ற மாணவர்கள் இருவரும் 4 ஏ அதிவிசேட சித்தி பெற்ற மாணவர்கள் நால்வரும் இம்முறை வெளியான பெறுபேற்றில் சிறந்த பெறுபேறுகளை பெற்றுள்ளனர் .

மொத்தமாக 46 மாணவிகள் பரீட்சைக்கு தோற்றி கணித பாட சித்தியுடன் உயர் தரத்துக்கு 33



மாணவிகள் தகுதி பெற்றுள்ளனர் இது மொத்த சித்தி வீதத்தில் 72% வீதம் ஆகும்.

ஐந்து பாடங்களிலும்
கணித பாடம் தவிர்த்து 37 மாணவிகள் சித்தியடைந்திருப்பதுடன் இது நூற்று வீதத்தில் 80% ஆகும்.

ஐந்து பாடங்களிலும் 3ஊ சித்தியோடு சித்தி பெற்றுள்ள மாணவிகள் 38 பேர்கள் ஆகும்.

இதன்படி அதி சிறந்த பெறுபேற்று புள்ளிவிபரத்தின் படி இம்முறை வெளிவந்த கஹட்டோவிட்ட முஸ்லிம் பாலிக்காவின் சாதாரண தர பெறுபேற்று சுருக்கத்தை கீழுள்ளவாறு சுருக்கி நோக்க முடியும்.

9A. 6
8A B. 1
7A. 2C. 1
6A. 3B. 1
5A. 2
4A. 4

9 பாடங்களிலும் யு சித்தியை பெற்றுக்கொடுத்துள்ளமை பாலிக்காவின் வரலாற்று சிறப்பு மிக்க அடைவாகும்.இதன் மூலம் பாடசாலைக்கும்,ஊருக்கும் பெருமை தேடிக்கொடுத்த மாணவிகளுக்கும் ஏனைய சிறந்த பெறுபேறுகளையும், உயர்தர தகைமை சித்தியையும் பெற்றுக்கொடுத்துள்ளமை சிறப்பம்சம் ஆகும்.

# கண்டி கலஹாவில் புலமைப் பரிசில் உதவிக் கரம் நிகழ்ச்சி





**(ரஷீத் எம். றியாழ்)**

தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை எழுத உள்ள மாணவர்களுக்காக கண்டி கல்வித் திணைக்களம் ஏற்பாடு செய்துள்ள உதவிக் கரம் வேலை திட்டத்தின் கீழ் கலஹா முன்மாதிரிப் பாடசாலையில் மாணவர்களுக்கான சிறப்பு நிகழ்ச்சிகள் (09) இடம் பெற்றன.

கண்டி கல்வி வலயத்தின் தமிழ் பிரிவு அபிவிருத்திக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ.ஆர்.எப். அமீனின் வழிகாட்டலின் கீழ் இடம்பெற்ற இந்த நிகழ்ச்சிகளை ஆரம்பப் பிரிவு ஆசிரிய வளவாளர் டி. ஹெலன் நெறிப்படுத்தி நடாத்தினார்.

அதிபர் எம். சப்ராஸ் இங்கு சிறப்புரை நிகழ்த்தினார். ஆசிரியர்களும் இதில் பங்குபற்றினர்.

இந்நிகழ்ச்சியில் கலஹா, தெல்தோட்டை சுற்று வட்டாரத்தைச் சேர்ந்த சுமார் 10 தமிழ் பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் பங்கு பற்றினர்.

எழுத்து ,வாசிப்பு ,ஆடல், பாடல், விளையாட்டு ஆகிய அம்சங்கள் இதில் இடம்பெற்றன.

# கிளீன் சிறிலங்கா திட்டத்தின் கீழ் கல்முனையில் பீச் கிளீனிங்





**(அஸ்லம் எஸ்.மௌலானா)**

அரசாங்கத்தின் கிளீன் சிறிலங்கா வேலைத் திட்டத்தின் கீழ் கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட கடற்கரை பிரதேசங்கள் (09) சுத்தம் செய்யப்பட்டு, அழகுபடுத்தப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்னசேகரவின் ஆலோசனையின் பேரில் கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளர் இஸட்.ஏ.எம். பைசாலின் அறிவுறுத்தலுக்கு அமைவாக கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.ரி.எம். றாபி தலைமையில் இவ்வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கல்முனை மாநகர சபையின் உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸீம், வேலைகள் அத்தியட்சகர் பி.ரி.எம். நஹீம், சுகாதாரப் பிரிவு பொறுப்பு உத்தியோகத்தர் ஏ.எம். டிலிப் நௌஷாத் ஆகியோரின் நெறிப்படுத்தலில் மாநகர சபையின் சுகாதார மற்றும் வேலைகள் பிரிவுகளைச் சேர்ந்த ஊழியர்கள் கூட்டாக இப்பணிகளில் ஈடுபட்டனர்.

இதன் கீழ் சாய்ந்தமருது, கல்முனை, பாண்டிருப்பு, மருதமுனை, பெரிய நீலாவணை ஆகிய பிரதேசங்களில் பொது மக்கள் ஒன்றுகூடுகின்ற பிரசித்தமான பொழுதுபோக்கு இடங்களும் குப்பைகள் கூடுதலாக தேங்கிக் கிடந்த பகுதிகளும் விஷேடமாக சுத்தம் செய்யப்பட்டுள்ளன.

இக்களப்பணியில் சிறப்பாக ஈடுபட்ட அனைத்து ஊழியர்களுக்கும் கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.ரி.எம். றாபி நன்றிகளைத் தெரிவித்துள்ளார்.

மேலும், மிகவும் சிரமங்களுக்கு மத்தியில் தொடர்ந்தேச்சியாக சுத்திகரிப்பு செய்யப்படுகின்ற கடற்கரை, கடற்கரைப் பூங்கா, சிறுவர் பூங்கா போன்ற பொது இடங்களில் குப்பைகள் போடுவதை தவிர்ந்து கொள்ளுமாறும் இவ்வாறான இடங்களை அழகாக பேணிப் பாதுகாப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் அவர் பொது மக்களைக் கேட்டுள்ளார்.

# மலேஷிய அபகஸ் போட்டியில் முதலிடம் பெற்ற மாணவனுக்கு கௌரவம்.!



மலேஷியாவில் நடைபெற்ற சர்வதேச அபகஸ் மன கணித போட்டியில் 12 நாடுகளுடன் போட்டியிட்டு முதலாம் இடத்தை பெற்ற வரகாபொலை பாபுல் ஹஸன் மத்திய கல்லூரியில் 4ஆம் தரத்தில் கல்வி பயிலும் தும்மலதெனியவை சேர்ந்த முஹம்மது சப்ரான் முஹம்மது அக்மலை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு தும்மலதெனிய அர் ரஹ்மா ஜும்மா பள்ளிவாசலில் இடம் பெற்றது.

பள்ளிவாயல் தலைவர் எம்.எப். எம்.பஸ்லின் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மாணவனுக்கு நினைவுச் சின்னம் வழங்குவதையும் வரகாபொலை பிரதேச சபை தலைவர் சந்தன ஹேரத் மற்றும் உறுப்பினர்கள் உட்பட ஜமா அத்தினர் கலந்து கொண்டதையும் படத்தில் காண்கிறீர்கள்.

# கல்குடா முஸ்லிம்களின் காணி விவகாரம் அமைதிப் பேரணியும் மகஜர் கையளிப்பும்

**(எஸ்.எம்.முர்ஷித்)**

கல்குடா முஸ்லிம்களின் காணிப் பிரச்சினையை வெளிக்கொணருமுகமாக அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையின் கல்குடாக்கிளையில் ஏற்பாடு செய்த பிரதேசம் தழுவிய அமைதிப் பேரணியும் மகஜர் கையளிக்கும் நிகழ்வும் இன்று வெள்ளிக்கிழமை (11.07.2025) ஜும்ஆத்தொழுகையின் பின்னர் ஓட்டமாவடி மணிக்கூட்டு கோபுர சுற்றுவட்டத்தில் இடம்பெற்றது.

இப்பேரணியில் கல்குடா பிரதேச ஜும்ஆ பள்ளிவாயல்களிலிருந்து வந்த பொது மக்கள் கலந்து கொண்டதுடன், பிரதேச சமூக அமைப்புக்கள், மக்கள் பிரதிநிதிகள், பொது நிறுவனங்களின் நிருவாகிகள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

இதற்கு நீதியைப்பெறும் பொருட்டு கடந்த காலத்தில் ஆணைக்குழு அமைக்கப்பட்டு சிபாரிசுகள் முன் வைக்கப்பட்ட போதிலும் அவற்றை அமுல்படுத்துவதில் தொடர்ந்தும் பல்வேறு நேரடி மற்றும் மறைமுக தடைகள் இருந்து வருகின்றன.

எமது காணி மற்றும் எல்லைப்







பிரச்சினைக்கான நியாயமான தீர்வொன்றினைப் பெற்றுக்கொள்வதற்கான சாத்தியமான அரசியல் சூழலொன்று நாட்டில் நிலவுவதாக பல்வேறு தரப்பினரும் கருதுவதால் எமது பிரச்சினையினை சமூக மயப்படுத்தி மாவட்ட மற்றும் மத்திய அரச நிருவாத்திற்கு தெரியப்படுத்தி அழுத்தம் கொடுக்கும் நோக்கில் அமைதிப்பேரணி ஏற்பாடு செய்யப்பட்டது.

அமைதிப்பேரணியில் கலந்து கொண்டோர் எங்களுக்கு அநீதி செய்யாதே இழந்த காணியை மீண்டும் தா என கோசங்கள் எழுப்பி தமது கோரிக்கையை முன்வைத்ததுடன், கோறளைப்பற்று மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் இருந்துபிரித்து கிரான் பிரதேச செயலாளர் பிரிவில் இணைத்த 05 கிராம சேவகர் பிரிவுகளையும் மீண்டும் ஓட்டமாவடி பிரதேச செயலகத்துடன் இணைக்குமாறும் கோறளைப் பற்று மத்தி பிரதேச செயலகத்திற்கு பன்னம்பலன ஆணைக்குழுவின் சிபாரிசினை நடைமுறைப்படுத்த கோறியும் ஜனாதிபதிக்கு தனித்தனியான மகஜர்கள் ஓட்டமாவடி பிரதேச செயலாளர் ஏ.தாஹிர் மற்றும் கோறளைப் பற்று மத்தி பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. றமீஸா ஆகியோரிடம் கையளிக்கப்பட்டது.

உரிமை தொடர்பாக கோறிக்கை விடுக்கும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்ட அமைதிப்பேரணியில் கலந்து கொண்டு ஒத்துழைப்பு வழங்கிய கோறளைப்பற்று, கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபைகளின் உறுப்பினர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், வர்த்தக சங்கப்பிரதிநிதிகள், பள்ளிவாயல்களில் தர்ம கர்த்தாக்கள் அனைவருக்கும் பாதுகாப்பு வழங்கிய பொலிஸார், இராணுவத்தினருக்கும் ஜம்இய்யதுல் உலமா சபையினால் நன்றி தெரிவிக்கப்பட்டது. இதே வேளை இப் பேரணியின் போது அமைக்கப்பட்டிருந்த மேடையில் அரசியல் பிரமுகர்கள் ஏறியபோது அரசியல் பிரமுகர்களை கீழே இறங்குமாறு பொது மக்கள் கூச்சலிட்டதில் இளைஞர் ஒருவர் தாக்கப்பட்டு வாழைச் சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் தாக்குதலுக்கு உள்ளான இளைஞர் மீறாவோடையை சேர்ந்த சாஹுல் ஹமீட் அம்ஜத் (வயது - 21) என்று அடையாளம் காணப்பட்டுள்ளார் இச் சம்பவம் தொடர்பாக வாழைச்சேனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (0774343461)

# கடும் நெருக்கடியில் இஸ்ரேல் - பாலஸ்தீன போர்



எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist, Chennai - Tamilnadu, India)



இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதான்யாகு வின் சமீபத்திய அமெரிக்கா பயணம் மற்றும் அவர் அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்ப் இடம் தற்போதைய பகிர்ந்து கொண்ட ஏராளமான விடயங்கள் மற்றும் தீர்வுகளை நோக்கி தான் இந்த உலகம் முழுவதும் எதிர் பார்த்து காத்து கொண்டு இருக்கும் நிலையில் இதற்கான தீர்வு அதாவது காசா மற்றும் இஸ்ரேல் போர் முடிவுக்கு வந்தால் அநேகமாக பல்வேறு பிரச்சனைகளுக்கு தீர்வு வந்து வீடும் என்பதே யதார்த்தமான நிலையாகும்.

காசா மீது ஓராண்டுக்கும் மேலாக இஸ்ரேல் போர் தொடுத்து வரும் சூழலில், ஈரானும் கடந்த ஆண்டு அக்டோபரில் இஸ்ரேல் குடியிருப்புகளை இலக்காக கொண்டு, 500 க்கும் மேற்பட்ட ஏவுகணைகளை கொண்டு தாக்குதல் நடத்தியது. அதற்கு பதிலடி தரும் வகையில், ஈரான் மீதும் இஸ்ரேல் தாக்குதலை தீவிரப்படுத்தியது.

ஈரானில் அணுசக்தி நிலையங்கள் அமைந்த நடான்ஸ் மற்றும் இஸ்பாஹன் ஆகிய இடங்கள் மற்றும் ஏவுகணை தளங்கள் அமைந்த தப்ரீஸ் மற்றும் கெர்மன்ஷா மற்றும் தெஹ்ரான் நகரில் உள்ள கட்டுப்பாட்டு மையங்கள் உள்பட 100-கநும் மேற்பட்ட இடங்களை இலக்காக கொண்டு, ஆபரேஷன் ரைசிங் லயன் என்ற பெயரில் கடந்த ஜூன் 13-ந்தேதி இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது.

200-க்கும் மேற்பட்ட விமானங்கள் மற்றும் ஆளில்லா விமானங்களை கொண்டு இந்த தாக்குதல் நடத்தப்பட்டது. ஈரான் புரட்சி படை தளபதி உசைன் சலாமி மற்றும் அணு விஞ்ஞானி பெரேதூன் அப்பாஸி உள்ளிட்ட பலர் உயிரிழந்தனர். ஈரானின் மத்திய தெஹ்ரானில் நடந்த வான்வெளி தாக்குதலில், மிக மூத்த ராணுவ தளபதியான மேஜர் ஜெனரல் அலி ஷாத்மனி படுகொலையானார்.

மேஜர் ஜெனரல் குலாம் அலி ரஷீத்தும் கொல்லப்பட்டார். ஷாத்மனி, ஈரான் தலைவர் அயோத்துல்லா அலி காமினியின் நெருங்கிய ராணுவ ஆலோசகர் மற்றும் புரட்சி படைகள், ஆயுத படைகள் ஆகியவற்றின் தளபதியாகவும் செயல்பட்டு வந்துள்ளார்.

இந்நிலையில், ஈரானின் வீரமரணம் அடைந்தவர்கள் மற்றும் படைவீரர்கள் விவகாரங்களுக்கான அறக்கட்டளையின் தலைவர் சயீத் ஒஹாதி, ஈரானின் அரசு தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியின்போது, இஸ்ரேலுடனான போரில் 1,060 பேர் உயிரிழந்து உள்ளனர். இந்த எண்ணிக்கை 1,100 ஆக அதிகரிக்க கூடும் என்று கூறினார். சிலர் கடுமையாக காயமடைந்து உள்ளனர் என்றும் கூறினார்.

எனினும், வாஷிங்டனை அடிப்படையாக கொண்ட மனித உரிமைகளுக்கான செயற்பாட்டாளர்கள் குழு அளித்த விரிவான தகவலில், இஸ்ரேல் தாக்குதலில் 1,190 பேர் ஈரானில் பலியாகி உள்ளனர். அவர்களில் 436 பேர் பொது மக்கள். 435 பேர் பாதுகாப்பு படையினர் என தெரிவித்து உள்ளது. இதுதவிர, 4,475 பேர் காயமடைந்து உள்ளனர் என்றும் அந்த குழு தெரிவித்து உள்ளது.

இந்த நிலையில் பாலஸ்தீன பிரதேசம் மற்றும் மக்களின் தன்னாட்சி உரிமையை வேண்டி ஹமாஸ் இயக்கம் தொடர்ந்து 650 நாட்களாக போரில் ஈடுபட்டு வரும் நிலையில் இந்த போரில் யெமன் நாட்டின் போராளிகள் குழுவான ஹொதீக்கள் தொடர்ந்து இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா கப்பல்களை தாக்கி மிகப் பெரிய அளவில் ஆன பின்னடைவை ஏற்படுத்தியது குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் அமெரிக்கா ஹொதீக்கள் உடன் சமாதானம் செய்து கொண்ட நிலையில் இஸ்ரேலை நோக்கி தற்போது அதன் பார்வை முற்றிலுமாக திரும்பி உள்ளது.இதற்கிடையில் டெல் அவிவ் நகரத்திலுள்ள பென் குரியன் பன்னாட்டு விமான நிலையத்தின் மீது, பாலிஸ்டிக் ஏவுகணை மூலம் இன்று தாக்குதல் நடத்தியுள்ளதாக, ஹவுதி கிளர்ச்சிப்படையின் செய்தித் தொடர்பாளர் யஹியா சரீயா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, ஹவுதி படையின் அதிகாரப்பூர்வச் செய்தித் தொலைக்காட்சியின் மூலம் அறிவித்த அவர், அந்த தாக்குதல் அதன் இலக்கை அடைந்ததாகக் கூறியுள்ளார்.இந்தத் தாக்குதலானது, பாலஸ்தீன மக்கள் மீதான இஸ்ரேலின் வன்முறைகளுக்கு பதிலடி என்று கூறிய அவர், இஸ்ரேலின் தாக்குதல்கள் நிறுத்தப்பட்டு, நிவாரணப் பொருள்களின் முடக்கம் தளரும் வரை, செங்கடல் பகுதியில் வரும் இஸ்ரேல் மற்றும் அந்நாட்டைச் சேர்ந்த கப்பல்கள் மீதான தங்களது ஏவுகணைத் தாக்குதல்கள் தொடரும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, டெல் அவிவிலுள்ள விமான நிலையத்தைக் குறிவைத்து யேமன் நாட்டிலிருந்த நடத்தப்பட்ட ஏவுகணைத் தாக்குதலை முறியடித்துள்ளதாக, இஸ்ரேல் ராணுவம் இன்று (ஜூலை 10) காலை கூறியிருந்தது.இதேபோல், கடந்த ஜூலை 6 ஆம் தேதி பென் குரியன் விமான நிலையத்தின் மீது நடத்தப்பட்ட பாலிஸ்டிக் ஏவுகணைத் தாக்குதலுக்கும், யேமனின் ஹவுதி கிளர்ச்சிப்படையினர் பொறுப்பேற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தற்போதைய மத்திய கிழக்கு நாடுகளில் நடைபெறும் உக்கிரமான போர் சூழலை கணக்கில் எடுத்துக் கொண்டு பெஞ்சமின் நிதான்யாகுவிற்கு மிகவும் கடுமையாக அழுத்தம் கொடுத்து வரும் நிலையில் காசாவில் நிரந்தர போர் நிறுத்தம் வேண்டும் என்று சர்வதேச சமூகமும் அங்கு போராடி வரும் ஹமாஸ் இயக்கத்தின் தலைவர்கள் உட்பட அனைவரின் அழுத்தம் நிறைந்த பார்வையாக இருந்து வருகிறது. குறிப்பாக காசாவில் இஸ்ரேல் நாடு எந்தவொரு ஒரு சாதனைகளையும் நிலை நிறுத்த இயலாத நிலைக்கு தள்ளப்பட்டனர். 57,000 மேற்பட்ட பொதுமக்களை படுகொலை செய்ததை மட்டுமே அவர்களின் சாதனையாக இருந்து வருகிறது.

மத்திய கிழக்கு வரும் காலங்களில் எப்போதும் பதட்டம் நிறைந்த மண்டலமாக மாறி விட அதிகம் வாய்ப்பு உள்ளது என்பதே யதார்த்தமான நிலையாகும். யூத சியோனிச வலதுசாரி சித்தாந்தம் பல்வேறு அழுத்தங்களை பாலஸ்தீன மக்களை அடக்குவதன் மூலம் தன்னை எந்தவொரு சக்தியாலும் எந்தவொரு நிலையிலும் அடக்க முடியாது என்பதை காட்ட வேண்டும் என்று அகங்காரம் நிறைந்த சக்தியாக திகழ்ந்தது. ஆனால், 650 நாட்களில் காசாவில் அவர்கள் எதனையும் சாதிக்கவில்லை என்பது மட்டுமல்லாமல் ஈரான் நடத்திய டெல் அவிவ் தாக்குதல் மூலம் இஸ்ரேல் நிலைகுலைந்து போய் உள்ளது குறிப்பிடத்தக்கது.

எந்தவொரு ராணுவ சக்தியும் தாங்கள் தோல்வி கண்டது உண்மை என்பதை ஒப்புக் கொள்ளவே மாட்டார்கள் என்பது தான் உலகின் இயல்பான ஒரு நிலையாகும். இதற்கு இஸ்ரேலிய அரசும் அதன் தலைமையும் விதிவிலக்கு அல்ல என்பதை நாம் புரிந்து கொள்ள அதிகம் காலம் தேவையில்லை என்பது தான் நிதர்சனம் நிறைந்த உண்மையாகும்.

இத்தனை போர் நடந்த பின்னரும் மனித உயிர்கள் இரண்டு தரப்பில் இழந்த நிலையில் கூட இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தனது போர் குணத்தை கைவிட மறுப்பது என்பது யூத ஆதிக்க மேலாண்மை நிலை நிறுத்தவே அவர் தொடர்ந்து போராடுகிறார் என்பதை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள முடிகிறது. குறிப்பாக பாலஸ்தீன மக்கள் அவர்களின் வலுவான போராட்டம் நிறைந்த வாழ்க்கையை எந்தவொரு நிலையிலும் அசைத்து பார்க்க இதுவரையில் இயலவில்லை என்பதே யதார்த்தமான உண்மையாகும். ஆனாலும் தொடர்ந்து இத்தனை மாதங்கள் ஆன பிறகும் பல்வேறு தொழில் நுட்ப அறிவு மற்றும் கருவிகள் தங்கள் இடம் இருப்பதாக கோலாச்சி கொண்டிருக்கும் இஸ்ரேல் ஏன் தனது பிரதானமான கோரிக்கையான பிணை கைதிகள் இருக்கும் இடத்தை கூட இன்னும் கண்டு பிடிக்க இயலவில்லை என்பது தான் நமது கேள்வியாகும்.

இதற்கிடையில் அமெரிக்காவில் பேட்டியளித்த பெஞ்சமின் நிதான்யாகு காசாவில் போர் நிறுத்தம் குறித்து முதன் முதலில் பேசினார். அவரது பேச்சில் பிணைய கைதிகள் உறவினர்கள் சந்தித்து பேசிய போது முடிவுகள் ஹமாஸ் இயக்கத்தின் கையில் மட்டுமே இருப்பதாக அவர் தெரிவித்தார். அதேநேரத்தில் ரஃபா மற்றும் கான் யூனிஸ் ஆகிய பகுதிகள் முழுமையாக இஸ்ரேலிய ராணுவத்தின் முழுமையான நிர்வாகத்தில் இருக்கும் என்று கூறினார். ஹமாஸ் ஆயுதத்தை கீழ் வைக்க வேண்டும் என்று இல்லாத ஊருக்கு வழி கேட்டால் எப்படி என்பது போல் அவரது பதில் இருந்தது. ஆனால் ஹமாஸ் ஒரு போதும் ஆயுதத்தை கீழ் வைக்க போவதில்லை. அதே நேரத்தில் காசாவில் யூத சியோனிச ராணுவம் இருப்பதை அவர்கள் ஒரு போதும் ஏற்றுக் கொள்ள போவதில்லை என்பதை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.இது போன்ற நிகழ்வுகள் நிச்சயமாக நிரந்தர தீர்வு இல்லாத ஒரு சூழலைப் ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

தற்போதைய நிலையில் காசாவில் ஹமாஸ் இயக்கத்தின் போராளிகள் மிகவும் கொடூரமான முறையில் தாக்குதலை இஸ்ரேலிய ராணுவத்திற்கு எதிராக நடத்தி வரும் நிலையில் யூத சியோனிச ராணுவம் கொத்து கொத்தாக படுகொலை செய்யப்பட்டு வருவதாக இஸ்ரேலிய ஊடகங்கள் செயலிகள் வெளியிட்டு வருகிறது.

இந்த நிலையில் ஈரான் உடன் யூரோப்பாவில் இருக்கும் இங்கிலாந்து மற்றும் ஜெர்மன் ஆகிய நாடுகள் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரான் புதிய முழக்கத்தை வைத்துள்ளார். அதேநேரத்தில் இஸ்ரேலிய ராணுவம் ஆக்கிரமிப்பிற்கு எதிராக வலிமையான முறையில் குரல் எழுப்பி வரும் பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரான் இங்கிலாந்து மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் முழுமையாக புதிய சுதந்திர பாலஸ்தீன நாட்டை அங்கீகாரம் செய்ய வேண்டும் என்று தெளிவாக சர்வதேச நாடுகள் மத்தியில் பேசிய நிலையில் இனி வரும் காலங்களில் புதிய சுதந்திர பாலஸ்தீன நாடு உருவாக கூடிய சூழல் கனிந்து வருவதைக் நாம் தெளிவாக அவதானிக்க முடிகின்றது.

பெஞ்சமின் நிதான்யாகு தற்போது இந்த போரை தொடர்ந்து நடத்தி வருவது அவரது அரசியல் இருப்பை தக்க வைக்கும் வகையில் தான் அவர் தடுமாறி வருவதாக நாம் நம்ப கூடியதாக இருக்கிறது. சர்வதேச அரங்கில் அவர் மீது கொலை குற்றம் மற்றும் உள்நாட்டில் ஊழல் குற்றச்சாட்டின் பேரில் அவர் மீது ஏராளமான புகார்கள் காத்திருக்கும் நிலையில் அவர் நாட்டின் பிரதமராக தொடர்ந்து இருக்க வேண்டும் என்று நம்புகிறார். அதற்கு தான் அவர் அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்ப் உடன் நெருக்கமான உறவைப் ஏற்படுத்தி போர் நிறுத்தத்தை மறுத்தும் தேவையற்ற கோரிக்கைகளை எழுப்பி வருகிறார்.

பெஞ்சமின் நிதான்யாகு வின் வரம்பற்ற நடவடிக்கைகள் சொந்த நாட்டில் மிகப் பெரிய அளவில் ஆன பின்னடைவை அவருக்கு ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. இஸ்ரேல் நாட்டில் இருந்து பல இலட்சக்கணக்கான மக்கள் வெளிநாடுகளுக்கு சென்று விட்டனர். 73 சதவீதம் யூதர்கள் வேலை தேடி அயல்நாட்டு பயணத்தை மேற்கொண்டு வருகின்ற நிலையில் மத்திய கிழக்கு பிரதேசச் நமக்கு இனி வாழ்வதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை அவர்கள் மிகத் தெளிவாக உணர்ந்து இருக்கும் நிலையில் தான் இது போன்ற சுயாதீன வெளியேற்றம் தொடருவதாக நாம் நம்ப கூடியதாக இருக்கிறது.

இனி வரும் காலங்களில் இஸ்ரேலிய பொருளாதாரம் மற்றும் பாதுகாப்பு குறித்து மிகப் பெரிய அளவில் ஆன பதட்டம் நாட்டு மக்களிடையே வெகுவாக பரவி வருவதை அந்த நாட்டின் உள்ள பிரதான ஊடகங்கள் உலகிற்கு தொடர்ந்து சுட்டி காட்டி வருகின்றனர். இருந்த போதிலும் இஸ்ரேல் ஊடகங்கள் மிகப் பெரிய அளவில் ஆன நெருக்கடிகளை அரசிடம் இருந்து சந்தித்து வருகிறது என்பதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது.

எனவே, வரும் காலங்கள் யூதர்கள் வாழ்வதற்கு மிகப் பெரிய அளவில் ஆன பின்னடைவை எல்லா நிலைகளிலும் ஏற்படுத்தும் என்பதை யூத அறிவு சார்ந்த தளத்தில் இருந்து பலர் பகிர்ந்து வருவதைக் காண கூடியதாக உள்ளது. இந்த இறுக்கமான சூழல் தொடரும் நிலையில் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நிதான்யாகு ஆட்சியை நிச்சயமாக இழக்கும் சூழல் ஏற்படும் என்பதே காலத்தின் கட்டாயமாக அமையும் என்பதே உண்மையாகும்.

# வெலம்பொட முஸ்லிம் மகாவித்தியாலயத்திற்கு விஜயம் செய்த ரவூப் ஹக்கீம்

**(கே. எ.ஹமீட் )**

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் வெலம்பொட முஸ்லிம் மகா வித்தியாலயத்திற்கு விஜயம் ஒன்றினை (13) மேற்கொண்டிருந்தார். பாடசாலையின் எதிர்கால நடவடிக்கைகள் மற்றும் தேவைகள் தொடர்பாக கேட்டறிந்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதாகவும் பாடசாலையின் அதிபர் எம். பைறூஸ் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் உடுநுவர பிரதேச சபையின் உறுப்பினர் முஸ்தஃபீர் ஹாஜியார் மற்றும் பாடசாலை ஞனுநுஊ உறுப்பினர்கள் ஏ.எல். பைஸல், இம்தியாஸ் ஹாஜியார், ஏ.எஸ்.கியாஸ் சேர், ராபிஸரீப்டீன் ஆகியோரும் கலந்து கொண்டனர்



# வடமத்திய மாகாண சபையின் முதல் தமிழ் பெண் செயலாளராக சுபாஜினி மதியழகன் நியமனம்



**(எம்.ரீ.ஆரிப்)**

வடமத்திய மாகாண சபை வரலாற்றில் முதன் முதலில் யாழ்ப்பாணம் பிரதேசத்தைச் சேர்ந்த நிர்வாக சேவை அதிகாரியான சுபாஜினி மதியழகன் தனது கடமைகளை (14) பொறுப்பேற்றுக் கொண்டார்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலாளராக கடமையாற்றிய சுபாஜினி மதியழகன் நிர்வாக சேவை சிறப்பு தரத்திற்கு பதவி உயர்வு பெற்ற நிலையில் வடமத்திய மாகாண சபை செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஜீனியஸ்பார்க் கல்வி நிறுவனத்தின் 18 ஆவது வருட பரிசளிப்பு விழா





**( பீ.எம். முக்தார் )**

பாணந்துறை ஹேனமுல்லை, வத்தல்பொல ஜீனியஸ்பார்க் கல்வி நிறுவனத்தின் 18ஆவது வருட பரிசளிப்பு வைபவம் மொறட்டுவை எகடஉயன அரபாத் முஸ்லிம் மகா வித்தியாலய பாடசாலையின் கேட்போர் கூடத்தில் (13) நடைபெற்றது.

பிரதம அதிதிகளாக தர்கா நகர் நஜீப் ஹாஜியார் கல்வி நிலைய ஸ்தாபகர் கலாநிதி அல்ஹாஜ் நஜீப் பின் அமீர் ஆலிம் மற்றும் இந்நிகழ்விற்கு பிரதான ஊடக அனுசரணை வழங்கிய தேசிய தமிழ் நாளிதழ் தினகரன் வார மஞ்சரி பிரதம ஆசிரியர், பிரதம அதிதியாக டி செந்தில் வேலவர் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

சிறப்பு அதிதிகளாக ஹொரேத்துடுவை முஸ்லிம் மகா வித்தியாலய அதிபர் எஸ். எச். எம். முத்தலிப், ஓய்வு பெற்ற மக்கள் வங்கி முகாமையாளர் ஏ .ஆர். எம். நிபாத், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் முகாமைத்துவ உதவியாளர் மற்றும் சிரேஷ்ட ஊடகவியலாளர் பீ.எம். முக்தார், சிரேஷ்ட ஊடகவியலாளர் ஏ . எல்.எம் சத்தார் உட்பட பாணந்துறை பிரதேசத்தில் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள், ஊடகவியலாளர் என பலரும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

லேக் ஹவுஸ் நிறுவனத்தின் தினகரன் வாரமஞ்சரி நாளிதழ் ஊடக அனுசரணையுடன் நடந்தேறிய இந்நிகழ்வில் ஜீனியஸ்பார்க் கல்வி நிறுவனத்தின் பகுதி நேர வகுப்புகளில் கலந்து கொண்ட தரம் 5 புலமை பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிகளை தாண்டிய, அண்மித்த மாணவ மாணவிகளுக்கு விருதுகளும் சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றதோடு, அதிதிகளுக்கு நினைவுச் சின்னங்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# 21 வயதுக்குட்பட்ட மாகாண மட்ட உதைப்பந்தாட்ட போட்டியில் புத்தளம் அணி சம்பியனானது



**( எம் எச் எம் சியாஜ்)**

புத்தளம் தெற்கு கோட்டத்துக்குட்பட்ட கடையாமோட்டை முஸ்லிம் மத்திய கல்லூரியின் 21 வயதுக்குட்பட்ட அணயினர் மாகாண மட்டத்தில் இடம்பெற்ற உதைப்பந்தாட்ட போட்டியில் சம்பியனானது.

மாகாண மட்டத்தில் நடைபெற்ற இந்த போட்டி தொடர் திங்கட்கிழமை (14) புத்தளம் மாவட்ட விளையாட்டு அரங்கில் இடம்பெற்றது.

இந்த உதைப்பந்தாட்ட தொடரில் புத்தளம் மற்றும் குருநாகல் மாவட்ட பாடசாலைகளிலிருந்து சுமார் 15 பாடசாலை அணிகள் பங்கேற்றன.

இத்தொடரின் இறுதிப் போட்டியில் கடையாமோட்டை முஸ்லிம் மத்திய கல்லூரி அணியும், மாதம்பை அல் மிஸ்பா முஸ்லிம் மகா வித்தியாலய அணியும் பங்கேற்றன.

பரபரப்பான இறுதிப் போட்டியில் 01 : 00 என்ற கோல் அடிப்படையில் கடையாமோட்டை முஸ்லிம் மத்திய கல்லூரி அணி வெற்றி பெற்று மாகாண சம்பியனானது.

இதன் மூலம் அடுத்து வரும் மாகாணங்களுக்கிடையிலான போட்டியில் பங்கேற்க கடையாமோட்டை முஸ்லிம் மத்திய கல்லூரி அணி தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# குருநாகல் முஸ்லிம் வர்த்தக சங்கத்தின் 12 ஆவது ஆண்டு நிறைவுப் பொதுக் கூட்டம்





**(மாவத்தகம நிருபர் )**

இம்முறை எமது நாட்டில் முஸ்லிம்கள் இனவாத மற்ற மிகவும் அமைதியான முறையில் தங்களுடைய வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான சூழல் உருவாகியுள்ளது. இது தொடர்ந்து மேற்கொள்வதற்கும், வர்த்தகத் துறையை ஊழலற்ற நேர்மையான முறையில் முன்னெடுத்துச் செல்வதற்கும் அரசாங்கம் தயாரக இருக்கின்றது என்று குருநாகல் மாவட்ட தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எம். கே. எம். அஸ்லம் தெரிவித்தார்.

குருநாகல் முஸ்லிம் வர்த்தக சங்கத்தின் 12 ஆவது ஆண்டு நிறைவு பொதுக் கூட்டம் புலுஸ்கை ஹோட்டலில் தலைவர் எம். வை. எம். கியாஸ் தலைமையில் இடம்பெற்றது.


இந்நிகழ்வில் பிரதம அதிதியாக குருநாகல் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் எம். கே. எம். அஸ்லம் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

இந்நிகழ்வில் கௌரவ அதிதிகளாக குருநாகல் மாநகர சபையின் பிரதி முதல்வர் அஸார்தீன் மொய்னுதீன் , குருநாகல் போதனா வைத்தியசாலையின் வைத்திய அதிகரி சாபி, குருநாகல் மாநகர சபை உறுப்பினர் டி. எம். இர்பான் ஆகியோர் கலந்து கொண்டனர்.

புதிய நிர்வாகத் தெரிவின் போது தலைவராக கே. எச். எம். அனுஸ்டீன், செயலாளராக மில்ராஜ், பொருளாளராக எம். ஆர், எம். சம்சுடீன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இதன் போது மூத்த வர்த்தகப் பிரமுகர்கள், அரசியல் பிரமுகர்கள் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கஹட்டோவிட்ட பத்ரியாவில் மொஹம்மத் இன்சாப் ஒன்பது பாடங்களிலும் அதி விசேட சித்தி 9A..!




**(எம்.ஆர்.லுத்புல்லாஹ்)**

கஹட்டோவிட்ட அல் பத்ரியா மகா வித்தியாலயத்தில் இம்முறை ஆண் மாணவர் ஒருவர் மொஹம்மத் இன்சாப் ஒன்பது பாடங்களிலும் 9A அதிவிசேட சித்தியடைந்துள்ளமை சிறப்பம்சம் ஆகும்.

இது தவிர 7 A அதி விசேட சித்தியை இரண்டு மாணவர்களும்,6 A அதி விசேட சித்தியை இரண்டு ஆண் மாணவர்கள் உட்பட மூன்று பேரும்,5 A அதி விசேட சித்தியை 3 ஆண்மாணவர்களும் பெற்றுக் கொடுத்துள்ளார்கள்.

அல் பத்ரியாவில் இருந்து பரீட்சைக்குத் தோற்றிய 61 மாணவர்களில் 67.2 வீத மாணவர்கள் நேரடியாக உயர்தரத்துக்கு தகுதி பெற்றுள்ளனர். இவர்களில் 1 மாணவர் 9 பாடங்களிலும் A சித்தி பெற்றுள்ளார்.

வெளியிடப்பட்டுள்ள பகுப்பாய்வின்படி தெரிவுப் பாடங்களில் அதி கூடிய சித்தி வீதம் அவதானிக்கப்பட்டுள்ளது. சிங்களம், வணிகக் கல்வி, அரபு பாடங்களில் 100 வீத சித்தியும் சுகாதாரம் 97, தமிழ் இலக்கியம் 92 வீத சித்தியும் பதிவாகியுள்ளது.

அரபு மொழியில் ஒரே ஒரு மாணவர் தோற்றி யு தரத்தில் சித்தியடைந்துள்ளார்.

அடிப்படைப் பாடங்களில் இஸ்லாம் பாடத்தில் 90 வீத சித்தி பதிவாகியுள்ளது.

இஸ்லாம் பாடத்திலேயே அதி கூடிய A சித்தியும் பெறப்பட்டுள்ளது. 61 பேரில் 23 பேர் (38 வீதம்) A தரத்தில் சித்தியடைந்துள்ளனர். அடுத்ததாக தமிழ் மொழியில் 13 பேரும் ( 15 B, 14 C ) கணிதத்தில் 11 பேரும் வரலாற்றில் 9 பேரும் A சித்தி பெற்றுள்ளனர். ஆங்கில பாடத்தில் 3 A , 12 B சித்திகள் பதிவாகியுள்ளன.

# புத்தளம் முல்லிபுரம் முதல் நான்காம் கட்டைவரையுள்ள பிரதேச நலனுக்காக முக்கிய தீர்மானம்

## தூய தேச கட்சி உறுப்பினர் பதுருஸ் சமான் சபையில் வலியுறுத்தல்



புத்தளம் பிரதேச சபையின் முதல் கூட்டத்தில், தூய தேசத்திற்கான கட்சியின் உறுப்பினர் திபதுருஸ் சமான் தனது கட்சியின் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றும் முயற்சியைத் தொடங்கியுள்ளார்.
பல்வேறு பிரச்சினைகளுக்கும் துன்பங்களுக்கும் முகங்கொடுத்துக் கொண்டிருக்கும் முல்லிபுரம் முதல் நான்காம் கட்டை வரை உள்ள மக்களின் குறைகளை நிரந்தரமாக தீர்க்க, அந்தப் பகுதிகளை புத்தளம் மாநகர சபையுடன் இணைப்பதே ஒரே தீர்வு என அவர் சபையில் வலியுறுத்தினார்.
இப்போது அந்த பிரதேச மக்கள், பிறப்புச் சான்றிதழ் உள்ளிட்ட அரச தேவைகளுக்காக முந்தல் பிரதேச செயலகத்திற்கும், மதுரங்குளியில் உள்ள பிரதேச சபைக்கும் சென்று வர வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார்கள். இது அவர்களுக்குப் பெரிய சிரமமாக உள்ளது.
இதற்கான தீர்வை அரசியல் வாதங்களைத் தாண்டி, எல்லா உறுப்பினர்களும் ஒன்றிணைந்து ஆதரிக்க வேண்டும் எனவும், இத்தகைய நடவடிக்கைகள் மூலம் மட்டுமே மக்கள் நலன் அடைய முடியும் எனவும் பதுருஸ் சமான் சபையில் வலியுறுத்தினார்

# ஒட்டமாவடி வீதிகளை துப்பரவு செய்யும் பணியில் இராணுவத்தினர்





**(எஸ்.எம்.எம். முர்ஷித்)**

கோறளைப்பற்று மேற்கு, ஓட்டமாவடி பிரதேச சபை தவிசாளர் எம்.எச்.எம்.பைறூஸின் வேண்டுகோளுக்கமைய பிரதேச சபை எல்லைக்குள் காணப்படும் வீதிகளை துப்பரவு செய்யும் பணிகளை நாவலடி இராணுவ முகாம் இராணுவத்தினர் மேற்கொண்டு வருகின்றனர்.
இதன் போது, பிரதேசத்தில் வீதி வேலைகள் மற்றும் குடிநீர் விநியோகத்திற்காக வெட்டப்பட்டு அகற்றப்படாமல் பொதுமக்களின் போக்குவரத்துக்கு இடைஞ்சலாகக் காணப்பட்ட கொங்கிரீட் துண்டுகள், உடைந்த வடிகான் மூடிகள் என்பன அகற்றப்பட்டு துப்புரவுப்பணி முன்னெடுக்கப்பட்டன.
தனது வேண்டுகோளையேற்று குறித்த பணியினை மேற்கொண்ட நாவலடி இராணுவ முகாம் பொறுப்பதிகாரி மற்றும் இராணுவத் தினருக்கு தவிசாளர் நன்றி தெரிவித்தார்.
எதிர்காலத்திலும் இவ்வாறான பணிகளை முப்படையினரின் உதவியுடன் மேற்கொள்ளவுள்ளதாகவும் மக்களுக்கான பணி தொடரு மெனவும் தவிசாளர் தெரிவித்தார்.

# ஆர். ஜே. மீடியா வலையமைப்பின் ஊடகப்பயிற்சி நெறி





**( ஐ. ஏ. காதிர் கான் )**

ஆர்.ஜே. மீடியா ஊடக வலையமைப்பு மற்றும் "எழுத்துச்சரம்" சஞ்சிகை நாடளாவிய ரீதியில் வழங்கும் மூன்று மாத கால ஊடகப் பயிற்சி நெறி, பதினைந்து அமர்வுகளாக சிறந்த வளவாளர்களைக் கொண்டு அண்மையில் நடத்தப்பட்டது .

இக்கற்கை நெறியின் இறுதியில் வழங்கப்படும் வானொலி நேரடி பயிற்சி மற்றும் கலை நிகழ்ச்சி ஏழாம் மற்றும் எட்டாம் குழுவினரை மையப்படுத்தி, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் கொத்மலை ஊடகப் பயிற்சி நிலையத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இதன் போது, செய்தி வாசிப்பு, வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சித் தொகுப்பு, வானொலி நேரடிப் பயிற்சி உள்ளிட்ட பயிற்சிகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வின் முதன்மை அதிதியாக ஆர்.ஜே. மீடியா வலையமைப்பின் பணிப்பாளரும் ஊடகப் பயிற்றுவிப்பாளருமான அறிவிப்பாளர் ஏ.எம். இன்ஷாப், விசேட அதிதிகளாக அறிவிப்பாளரும் வளவாளருமான கே.எம்.எம். சர்ஜதீன், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன கொத்மலை ஊடக கற்கைகள் நிலையத்தின் இணைப்பாளர் கபில குமார அரத்தன, ஆர்.ஜே. மீடியா வலையமைப்பின் பிரதிச் செயலாளர் சபீயா பைசல், ஆர்.ஜே. மீடியாவின் நுவரெலியா மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சுமையா சுஹைப் மற்றும் பெற்றோர்கள், ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

# புத்தளம் அரசினர் முஸ்லிம் வித்தியாலயத்தில் இடம்பெற்ற விழிப்புணர்வு கருத்தரங்கு



**(எம் எச் எம் சியாஜ்)**

புத்தளம் பாலாவி புழுதிவயல் அரசினர் முஸ்லிம் வித்தியாலயத்தில் விழிப்புணர்வு கருத்தரங்கொன்று ஞாயிற்றுக்கிழமை (14) பாடசாலையின் அதிபர் எம். ஏ. எல்.எம். ரிபாய்தீன் தலைமையில் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது.
இக்கருத்தரங்கின் காலை அமர்வில் "மாணவர்கள் மறக்காமல் எவ்வாறு கற்றுக்கொள்வது" எனும் தலைப்பில் மாணவர்களுக்கும், மாலை அமர்வில் "பிள்ளைகளுக்கு எவ்வாறு கல்வி கற்றுக் கொடுப்பது" எனும் தலைப்பில் பெற்றோர்களுக்கும் என இரு பிரிவுகளாக இடம்பெற்றது.
குறித்த வழிகாட்டல் கருத்தரங்கை பிரபல உளவள ஆலோசகர் அஷ்ஷெய்க் ஆதில் ஹஸன் வளவாளராக கலந்து கொண்டு நடாத்தினார்.
இதன்போது அதிகமான மாணவர்களும் பெற்றோர்களும் கலந்து கொண்டு பயன் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# துருக்கியின் ஜனநாயக மற்றும் தேசிய ஒற்றுமை தினம் கொழும்பில் அனுஷ்டிப்பு







**(அஷ்ரப் ஏ சமத்)**

துருக்கி நாட்டில் கடந்த 2016 ஜூலை 15 ஆம் திகதி தோல்வியடைந்த இராணுவப் புரட்சியை நினைவு கூறும் வகையில் "ஜனநாயக மற்றும் தேசிய ஒற்றுமை தினம்" 15ஆம் திகதி 15 ஆண்டுகள் நினைவு நாள் அனுஷ்டிக்கப் பட்டது.
அந்த வகையில் கொழும்பில் உள்ள துருக்கிய தூதுவர் செமிஹ் லுத் ருஹூட்( Semih Luttu Turgut அழைப்பின் பேரில் கொழும்பு ஹமீத் அல் ஹூசைனியா தேசிய பாடசாலையின் உயர் தர 50 மாணவர்களும் அதிபர் எம்.ஆர்.எம். றிஸ்கீ மற்றும் ஆங்கில பாட ஆசிரியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.
தூதுவரின் இல்லத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் இராணுவப் புரட்சி முறியடிப்பது மற்றும் சம்பவங்கள் தொடர்பான புகைப்படக் காட்சிகளை மாணவர்களுக்கு காண்பித்து தூதுவர் விளக்கவுரை நிகழ்த்தியமை குறிப்பிடத்தக்கது.

# வாழைச்சேனை வர்த்தக சங்கம் முகைதீன் ஜூம்ஆப் பள்ளிவாசலுக்கு நிதியுதவி!





**(எச்.எம்.எம். பர்ஸான்)**

கோறளைப்பற்று வாழைச்சேனை வர்த்தக சங்கம் வாழைச்சேனை முகைதீன் ஜூம்ஆ பெரிய பள்ளிவாயலின் முதலாம் மாடிக்கான கட்டுமானப் பணிக்காக 13 இலட்சத்தி 51 ஆயிரம் ரூபாய் நிதியுதவியினை வழங்கியுள்ளது.
வாழைச்சேனை வர்த்தக சங்க உறுப்பினர்கள் மேற்கொண்ட முயற்சியால் வர்த்தகர்களின் உதவியுடன் இந்நிதி கேசரிக்கப்பட்டு ள்ளது. இவ்வாறு சேகரிக்கப்பட்ட நிதியினை வர்த்தக சங்கம் வாழைச்சேனை முகைதீன் ஜூம்ஆ பள்ளிவாசல் நிர்வாகத்திடம் ஒப்படைத்துள்ளனர்.
இந் நிதி சேகரிப்பு தொடர்பான கணக்கு விபரங்கள் புதன்கிழமை (16) வர்த்தகர்ளுக்கு வழங்கி வைக்கப்பட்டன.
கணக்கு விபரங்களை வழங்கி வைக்கும் நிகழ்வு, வாழைச்சேனை வர்த்தக சங்க தலைவரும் அஸார்தீன் புருட் சொப் உரிமையாளரும் சமூக செயற்பாட்டாளருமான எம்.எஸ். றபீக் தலைமையில் இடம்பெற்றது.
இதில், வாழைச்சேனை முகைதீன் ஜ/ம்ஆ பெரிய பள்ளிவாசல் செயலாளரும் ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளருமான எம்.எஸ். கே.றகுமான், வர்த்தக சங்க உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.
சீமெந்தாகவும், பணமாகவும் இந்த உதவியை புரிந்த வாழைச்சேனை வர்த்தக சங்கத்தினருக்கு வாழைச் சேனை ஜூம்ஆப் பள்ளிவாசல் நிர்வாகத்தினர் நன்றிகளைத் தெரிவித்துள்ளனர்.